# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2053 மார்கழி 02 சனிக்கிழமை 17.12.2022 கதிர் 42


### இனிது ரகசியம் அல்ல!

தமிழரசு கட்சியின் தலைமைச் செயலகமாக யாழ்ப்பாணம் மார்ட்டின் வீதி அலுவலகம் செயற்படுகின்றது. அதற்கு ஒரு பொதுவான பெயர் உண்டு - ‘வயோதிபர் மடம்’.

கட்சித் தலைவரில் இருந்து அங்கு நிர்வாகிகள் (தொடர்ச்சி 2ம் பக்கம்)

# போராளி எழிலனை ஆஜர் செய்ய இராணுவத்துக்கு மன்று உத்தரவு





## மனைவி அனந்தி தாக்கல் செய்த ஆள்கொணர்வு மனு மீது கட்டளை

- வவுனியாச் செய்தியாளர்: கி.வசந்தரூபன் -

வவுனியா,டிசம்பர் 17

இறுதிக்கட்டபோரில் இராணுவத்தினரிடம் சரணடைந்து காணாமல் போனவர் என்று கூறப்படும் விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல் துறை பொறுப் பாளர் எழிலனை முன்னிலைப்படுத்துமாறு தாக்கல் செய்யப்பட்ட ஆள்கொணர்வு மனு மீதான உத்தரவில் அடுத்த தவணையின் போது காணாமல் ஆக்கப்பட்டவர் என்று கூறப்படும் எழிலனை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த வேண்டும் அல்லது அவரை முன்னிலைப்படுத்த முடியாமைக்கான காரணங்களை விளக்க வேண்டும் என வவுனியா மேல்நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது.

எழிலனின் துணவியாரான அனந்தி சசிதரன் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆள்கொணர்வு மனு மீதே நீதிமன்றம் இந்த உத்தரவை விடுத்தது. (தொடர்ச்சி 2ம் பக்கம்)

## சு.கவின் கூட்டணி விரைவில் அறிவிப்பு

### தலைவர் மைத்திரி கூறுகிறார்



ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிஏனையக்கட்சிகளுடன் கூட்டணி அமைப்பதற்கான கலந்துரையாடல்கள் நிறைவடைந்துள்ளன தெரிவிக்கும் அக்கட்சியின் (தொடர்ச்சி 2ம் பக்கம்)

## இரத்மலானை விமான நிலையத்தால் 4 ஆண்டுகளில் ரூ.169 கோடி நஷ்டம்




இரத்மலானை, யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு விமான நிலையங்கள் கடந்த நான்கு வருடங்களில் இருநூறு கோடி ரூபாவுக்கும் அதிகமான நட்டத்தைச் சந்தித்துள்ளன எனக் கணக்காய்வு அறிக்கை தெரிவிக்கின்றது.

கொழும்பு - (தொடர்ச்சி 2ம் பக்கம்)

## மனைவி, மகளை வெட்டிய கணவன் மடக்கப்பட்டார்

யாழ்ப்பாணம் - வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணிப் பகுதியில், குடும்பத்தகராறு முற்றிய நிலையில்,மனைவி மற்றும் மகள் மீது வாள்வெட்டுத் தாக்குதலை மேற்கொண்ட கணவன், அங்கிருந்து தப்பிச் செல்ல முயன்றபோது அயலவர்கள் இணைந்து (தொடர்ச்சி 2ம் பக்கம்)

## டொலருக்குப் பதில் இந்திய ரூபாவில் இனிமேல் இங்கு வர்த்தகம் செய்யலாம்



இந்திய ரூபாயை பயன்படுத்தி இந்தியாவுடன்வர்த்தகம்செய்வதற்கான வாய்ப்பை இலங்கைக்கு வழங்க அந்நாட்டு மத்திய வங்கி ஒப்புதல் அளித்துள்ளது.

இலங்கையைத் தவிர ரஷ்யா, மொரிஷியஸ் ஆகிய நாடுகளும் இதே அங்கீகாரத்தைப் பெற்றுள்ளன.

அதன்படி அந்த நாடுகள் இந்திய ரூபாயில் பரிவர்த்தனை செய்வதற்கு வொஸ்ட்ரோ என்ற கணக்கை தொடங்க ஒப்புக்கொண்டதாக ரொய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

இதன்படி, இலங்கையும் வர்த்தக கொடுக்கல் வாங்கல்களுக்கு அமெரிக்க டொலர்களுக்கு (தொடர்ச்சி 2ம் பக்கம்)

## புலமைப் பரிசில் பரீட்சை ஏற்பாடுகள் யாவும் தயார்!

ஐந்தாம் வகுப்பு மாணவர்களுக்கான புலமைப் பரிசில் பரீட்சை நாளை ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது. இம்முறை நாடளாவிய ரீதியில் 3 இலட்சத்து 34 698 பரீட்சார்த்திகள் பரீட்சைக்கு தோற்றவுள்ளனர் எனவும் , இதற்காக 2,894 பரீட்சை மண்டபங்கள் அமைக்கப்பட்டுள்ளன என்ச்வும் பரீட்சைகள் ஆணையாளர் எல்.எம்.டி.தர்மசேன தெரிவித்தார்.

பரீட்சை திணைக்களத்தில் நேற்று (தொடர்ச்சி 11ம் பக்கம்)

## பௌத்த, பாலி பல்கலையை உடனடியாக மூடுவதற்கு முடிவு

### மாணவ செயலாளரான தேரர் கைது



ஹோமாகம பிடிபன பௌத்த மற்றும் பாலி பல்கலைக்கழக விடுதிகளில் தங்கியுள்ள இளங்கலை மாணவர்களை நேற்று மாலை 4 மணிக்கு முன்னர் அங்கிருந்து வெளியேறுமாறு பல்கலைக்கழக நிர்வாகம் அறிவித்துள்ளது.

மேலும் டிசம்பர் 19ஆம் திகதி முதல் மறு (தொடர்ச்சி 11ம் பக்கம்)

## ஒரே குடும்பத்தில் 3 தலைமுறை ஒரே சமயத்தில் திருமணப் பதிவு

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய் - தந்தை, பாட்டி - தாத்தா மற்றும் மகள் - மருமகள் ஆகியோருக்கு ஒரே நாளில் திருமணம் நடைபெற்ற சம்பவம் ஒன்று யட்டிநுவர பிரதேசத்தில் இருந்து பதிவாகியுள்ளது.

யட்டிநுவர பிரதேச செயலகத்தினால் இந்த விடே திருமணம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (தொடர்ச்சி 11ம் பக்கம்)

## கோட்டாவின் ஊடகச் செயலர் நேற்றுக் கண்டி நகரில் கைது!

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த போது, ஜனாதிபதி ஊடகப் பிரிவின் பணிப்பாளர் நாயகமாக செயற்பட்ட ஊடகவியலாளர் சுதேவ ஹெட்டி ஆரச்சி கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று வெள்ளிக்கிழமை கண்டி பொலிஸார் அவரைக் கைது செய்துள்ளனர்.

குடிபோதையில் வாகனம் செலுத்தி வெளிநாட்டு தூதுக் குழுவின் பயணத்துக்கு தடங்கல் (தொடர்ச்சி 11ம் பக்கம்)

## தினேஷ் ஷாப்டரின் கொலை தொடர்பில் கிரிக்கெட் பிரபலத்தைத் தேடி வேட்டை

தினேஷ்ஷாப்டரின்கொலையுடன்தொடர்புடையவர் எனச் சந்தேகிக்கப்படும் முன்னாள் இங்கிலாந்து கிரிக்கெட் வர்ணனையாளரான இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் ஊடக முகாமையாளராக பணியாற்றிய ஒருவரைக் கண்டுபிடிக்க குற்றப் புலனாய்வுத் திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த நபருக்கும் தினேஷ் ஷாப்டருக்கும் இடையில் 138 கோடி ரூபா கொடுக்கல், வாங்கல் இடம்பெற்றுள்ளதாகவும், இந்தக் கொலையின் முக்கிய சந்தேக நபராக பொலிஸாரால் தேடப்படுபவர் அந்தத் தொகையைச் செலுத்தாத காரணத்தால் முன்னதாக கைது செய்யப்பட்டிருந்தார் எனவும் அந்த அதிகாரி கூறியுள்ளார்.

இந்தக் கொலை ஒப்பந்தத்தின் (தொடர்ச்சி 11ம் பக்கம்)

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வரை எல்லோரும் 'பழசு' என்பதால் மட்டுமல்ல, புதுசைச்சேர்த்து, அரவணைத்து, முன்னுரிமை கொடுக்கும் பக்குவமும் அவர்களுக்கு இல்லை என்பதால் இந்த அடைமொழி பல சமயங்களில் கனகச்சிதம்.

அங்கிருப்போருக்கு தமது வயது எண்பதைத் தாண்டி அந்திமத்துக்கு போவது பற்றி புரிவதில்லை. ஆனால் கட்சியின் வயது நேரத்துடன் போய்விட்டது போன்று கணக்கு பார்த்துள்ளனர். வயது போன கூட்டத்தின் கணக்கு பார்க்கும் திறனை, கட்சியின் முக்கிய உறுப்பினர் ஒருவர் "கணக்குப் புத்தகம் பேச வேண்டும்; கணக்குப்பிள்ளை பேச கூடாது" - என்று எனது வசனத்தில் தனது முகப்புத்தகத்தில் பதிந்திருக்கின்றார்.

சரி. இனி விடயத்துக்கு வருவோம். இலங்கை தமிழரசு கட்சியின் ஸ்தாபகக் கூட்டம் 1949 ஆம் ஆண்டு டிசம்பர் 18 ஆம் திகதி மருதானை எழுதுவினைஞர் சங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

அதன்படி பார்த்தால் வரும் 18 ஆம் திகதி - நாளை ஞாயிற்றுக்கிழமை - கட்சிக்கு 73 ஆண்டுகள் முடிகின்றன. 74 ஆம் ஆண்டில் கட்சி அடியெடுத்து வைக்கின்றது.

அந்தத் தினத்தில் கட்சியின் பவள விழாக் கொண்டாட்டம் என்று ஆரவாரத்தை தொடங்கி இருக்கின்றது வயோதிபர் மடம். கடந்த புதன்கிழமை 14ஆம் திகதி குறிப்பிட்டு, கட்சியின் மார்ட்டின் வீதித் தலைமைச் செயலகத்திலிருந்து கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜா மற்றும் கட்சியின் நிர்வாக செயலாளர் சேவியர் குலநாயகம் ஆகியோரின் பெயரில் அனுப்பப்பட்ட ஓர் அழைப்புக் கடிதத்தில் கட்சி ஆரம்பிக்கப்பட்டு 75 ஆம் ஆண்டு முன்னிட்டு வரும் 18.12.2022 இல் கிளிநொச்சி மாவட்டக் கூட்டுறவு சபை மண்டபத்தில், பவள விழா நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன எனத் தெரிவிக்கப்பட்டு இருந்தது.

இதை யாரோ சுட்டிக்காட்டியமையை அடுத்துப் புதிய அழைப்பிதழ் ஒன்று, '75 ஆவது ஆண்டு தொடக்க விழா' என்று கட்சியின் பொதுச் செயலாளர் சக்தியலிங்கத்தின் பெயரில் அச்சிட்டு விநியோகிக்கப்படுகின்றது.

உண்மையில் கட்சி தொடங்கி நாளை 18ஆம் திகதி 73 ஆண்டுகள் பூர்த்தியாகின்றன. 74 ஆவது ஆண்டில் கட்சி அடி எடுத்து வைக்கின்றது. அதற்கும் பவள விழாவுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. சரியாக சொல்வதானால் 18.12.2024 இல்தான் கட்சிக்கு 75 ஆவது ஆண்டு பவள விழா காலம். 18.12.2024 தொடக்கம் 18.12.2025 வரைதான் பவள விழா கொண்டாடப்பட வேண்டும். சரி 18.12.2023 அன்று 74 வருடங்கள் பூர்த்தி செய்து விட்டோம், 75 ஆவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கிறோம் என்ற பெயரில் '75 ஆவது ஆண்டு தொடக்க விழா' என்று 2023 டிசம்பரில் கொண்டாடினாலாவது அதில் நியாயம் உண்டு. அவற்றை விடுத்து, 73 வருடங்கள் முடிந்து 74 ஆம் ஆண்டில் காலில் எடுத்து வைக்கும் போது 75 ஆவது ஆண்டு கொண்டாடுவது என்பது எங்ஙனம் நியாயம்?

'கணக்குப் புத்தகம் பேசாமல் கணக்குப்பிள்ளை பேசுவதால்' வந்த விபரீதம் இது.

நான் ஆரம்பத்தில் சொன்ன மாதிரி கிழட்டுத் தலைவர்களுக்கு தங்களது வயது போவதும் தெரிவதில்லை; கட்சிக்கு வயது வரவில்லை என்பதும் தெரியவில்லை.

இப்படியான வழிநடத்தல்களில்தான் தமிழ் சமூகம் சிக்கி இருக்கப் போகின்றது என்று முன்னரே புரிந்தமையால்தான் 'தமிழினத்தை இனிமேல் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்!' என்று தந்தை செல்வா தீர்க்க தரிசனத்துடன் கூறிச் சென்றாரோ என்னவோ...!

- மின்னல் -

## போராளி எழிலனை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சிரேஷ்ட சட்டத்தரணி கே.எஸ்.ரட்ணவேல் இத்தகவலைத் தெரிவித்தார். இது தொடர்பான வழக்கின் உத்தரவு வவுனியா மேல் நீதிமன்றால் நேற்று வழங்கப்பட்ட நிலையில் மனுதாரர்கள் சார்பில் நீதிமன்றில் ஆஜராகிய சிரேஷ்ட சட்டத்தரணி கே.எஸ்.ரட்ணவேல் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த போதே இத்தகவலை வெளியிட்டார். தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் -

போர் முடிந்த இறுதி கட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களுடைய - அதாவது இலங்கை இராணுவத்திடம் சரணடைந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுடைய - வழக்குகள் பல விசாரணைக்கு வந்திருந்தன.

அவற்றில் முதல் ஐந்து வழக்குகளின் தீர்ப்பு இன்று வவுனியா நீதிமன்றத்தில் வழங்கப்படவிருந்தன. இந்த வழக்குகளின் பூர்வாங்க விசாரணை முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றத்தில் நடைபெற்று அதன் பின்னர் நீதவானின் அறிக்கையின் பிரகாரம் மேல்நீதிமன்றத்திற்கு வந்தது.

முல்லைத்தீவு நீதிமன்றத்தில் நடைபெற்ற விளக்கத்தில் எல்லா மனுதாரர்களும் சாட்சியத்தையளித்து பின்னர் இராணுவம் சார்பாகவும் சாட்சியம் அளிக்கப்பட்டது.

அந்த இராணுவ அதிகாரி சாட்சியம் அளிக்கும் போது சரணடைந்தவர்களின் பட்டியல் தங்களிடம் இருப்பதாகக் கூறியிருந்தார். எனினும் அந்தப் பட்டியல் நீதிமன்றிற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

பின்னர் இந்த வழக்கு மேல்நீதிமன்றில் பரிசீலிக்கப்பட்டு நேற்று முதலாவது வழக்குத் தீர்ப்பு வாசிக்கப்பட்டது.

அதன் பிரகாரம் மனுதாரர் தன்னுடைய கணவர் தனது கண்முன்னாலே தாங்களே சரணடைய வைத்தோம் என்றார். முகாமில் செய்த அறிவித்தலின் பிரகாரம் - அதாவது சரணடைந்தவர்கள் பாதுகாப்பாக வைக்கப்படுவார்கள் என்ற வாக்குறுதியின் அடிப்படையில் - தன்னுடைய கணவரை சரணடைய செய்து அதன் பின் தன்னுடைய கணவர் பல இ.போ.ச பேருந்துகள் மூலம் அவரும் அந்த பஸ்ஸில் அடைக்கப்பட்டு இராணுவத்தினரால் கொண்டு செல்லப்பட்டார் என்ற வாதத்தை நீதிமன்றம் ஏற்றுக் கொண்டது.

எனவே இறுதியாக அந்த மனுதாரரின் கணவர் அதாவது காணாமல் ஆக்கப்பட்டவர் இராணுவத்தின் மத்தியில்தான் இருந்தார், அவர்களுடைய கட்டுப்பாட்டில் இருந்தார் என்பதை மன்று ஏற்றுக்கொண்டது. அதே சமயத்தில் அதனை எதிர்த்த இராணுவ தரப்பினர் அது தொடர்பான திருப்திகரமான பதிலையும் முன்வைக்கவில்லை என்ற ஒரு நிலைப்பாட்டை நீதிமன்றம் எடுத்தது.

அதாவது அதை எண்பிக்கும் பொறுப்பு - காணாமல் ஆக்கப்பட்ட நபர் இராணுவத்திடம் சரணடையவில்லை என்ற அதனை நிரூபிக்கும் பொறுப்பு / இராணுவத்திடம் இருந்தது. ஆனால் பொறுப்பை அவர்கள் சரிவர தங்களுடைய சாட்சியங்கள் மூலம் எண்பிக்கவில்லை என்று நீதிமன்றம் கருதியது.

எனவே மனுதாரரின் வேண்டுகோளின் பிரகாரம் ஆள்கொணர்வு மனுவினுடைய எழுத்தாணையை நீதிமன்றம் அனுமதித்து, அடுத்த தவணையான 22.03.2023 அன்று காணாமல் ஆக்கப்பட்டவரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த வேண்டும் அல்லது அவரை முன்னிலைப்படுத்த முடியாமைக்கான காரணங்களை விளக்க வேண்டும் என்று நீதிமன்று உத்தரவிட்டது.

அதே சமயத்தில் இன்னுமொரு வழக்கில் மனுதாரர் போதுமான ஆவணங்களை நீதிமன்றின் முன்னால் சமர்ப்பிக்கவில்லை என்ற காரணத்தின் அடிப்படையில் அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டிருக்கின்றது - என்றார்.

அடுத்த மூன்று வழக்குகளும் வருகின்ற வருடம் ஜனவரி 27 ஆம் திகதி நீதிமன்றத்தில் கூப்பிடப்பட்டு அதன் தீர்ப்பு வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

## சு.கவின் கூட்டணி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன, கூட்டணி தொடர்பான அறிவிப்பு வெளியாகும் நாளில் எம்மோடு யார் இருக்கிறார்கள் என்பது தெரியவரும் எனவும் தெரிவித்தார்.

அநுராதபுரத்தின் ஜெய ஸ்ரீ மகா போதியில் வழிபாடுகளை மேற்கொண்டப் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நல்லாட்சி அரசாங்கத்தில் நானும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் இணைந்து செயற்பட தீர்மானித்தோம். அப்போது எனக்கு ஜனாதிபதி பதவியும் ரணில் விக்கிரமசிங்கவுக்குப் பிரதமர் பதவியும் கிடைத்தது. எனக்கு எதிராகக் கடுமையான விமர்சனங்களை முன்வைத்தார்கள். என்னை அவமதித்தார்கள். என்னை அவமதித்து எனக்கு எதிராக சேறுபூசியவர்களுக்கு இப்போது ஜனாதிபதி பதவியும் இல்லை, பிரதமர் பதவியும் இல்லை என்றார்.

கூட்டணி அமைப்பது தொடர்பான கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டு அனைத்துப் பணிகளும் நிறைவடைந்துள்ளன. இது தொடர்பான அறிவிப்பு வெளியாகும் நாளில் எம்மோடு யார் இருக்கிறார்கள் என்பதை அனைவரும் அறிந்து கொள்வார்கள் எனவும் தெரிவித்தார்.

எமது கட்சியை விட்டுச் சிலர் சென்று விட்டார்கள் என எமது கட்சிக்குள் எந்த விதமான பிரச்சினைகளும் ஏற்படவில்லை. கட்சியில் ஏற்பட்டிருந்த வெற்றிடங்களுக்குத் திறமையான, அறிவார்ந்தவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். கட்சியைப் பலப்படுத்தும் வேலைகளையே தற்போது செய்து வருகிறோம். ஜனவரி முதல் மக்களுக்கு எமது புதிய வேலைத்திட்டங்களை அறிவிக்க எதிர்பார்த்துள்ளோம். - என்றார்.

## இரத்மலானை விமான .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இரத்மலானை சர்வதேச விமான நிலையம் தொடர்ச்சியாக நட்டத்தை சந்தித்து வருவதாகவும், 2017 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் விமான நிலையத்தின் இழப்பு 169 கோடி ரூபாவிற்கும் அதிகமாகும் எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரத்மலானை விமான நிலையத்திற்கு கடந்த வருடம் மாத்திரம் 46 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும், 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் வருடத்திற்கு 13 விமானங்கள் இயக்கப்படுவதாகவும் அந்த அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

## மனைவி, மகளை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மடக்கிப்பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். வாள்வெட்டுக்கு இலக்கானவர்கள், அம்புலன்ஸ் மூலம் கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

## டொலருக்குப் பதில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பதிலாக இந்திய ரூபாயை பயன்படுத்த முடியும்.

இந்திய ரிசர்வ் வங்கி கடந்த ஜூலை மாதம் இந்த முறையை அறிமுகப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்
076 443 8622







# பண்டிகைக் காலத்தில் அதிக விலையில் பொருள்களை விற்பனை செய்வோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை!

பண்டிகை காலத்தில் அதிக விலைக்கு பொருள்களை விற்பனை செய்வோர் மற்றும் பொருள்களைப் பதுக்கி வைப்போரை தேடி விசேட சுற்றிவளைப்புகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

பிரதேச ரீதியில் வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கு இந்த விடயங்கள் தொடர்பில் தெளிவுபடுத்தப்படுவதாக நுகர்வோர் விவகார அதிகார சபையின் தலைவர் சாந்த நிரிஎல்ல குறிப்பிட்டார்.

அடுத்த வாரம் முதல் இந்த செயற்பாடுகளை மேலும் விரிவுபடுத்தவுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, முட்டை விலை தொடர்பான வழக்கு இன்றும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ள காரணத்தால் அது தொடர்பாக எவ்வித கருத்துகளையும் தெரிவிக்க முடியாது என நுகர்வோர் விவகார அதிகார சபையின் தலைவர் கூறியுள்ளார்.

முட்டைக்கான நிர்ணய விலையை உடன் அறிவிக்க வேண்டும் என நுகர்வோர் விவகார அதிகார சபைக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

எனினும், இதுவரை முட்டைக்கான நிர்ணய விலை அறிவிக்கப்படாமை குறிப்பிடத்தக்கது.




# வடக்கு – கிழக்கு மாகாணங்களில் இறந்த கால்நடைகளுக்கு நஷ்டஈடு?

## அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவிப்பு



வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இறந்த கால்நடைகளுக்காக நஷ்டஈட்டை வழங்குவது தொடர்பிலான, அமைச்சரவை பத்திரத்தை அடுத்த வாரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கவுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

மேற்படி யோசனைக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்தால், இறந்த கால்நடைகளுக்காக நஷ்டஈடு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் கூறியுள்ளார்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அதிக குளிர் காரணமாக, 1,800 இற்கும் அதிகமான கால்நடைகள் இறந்துள்ளன என கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# இலங்கையரொருவர் தனது அடிப்படை தேவைகளை பூர்த்திசெய்ய மாதம் 13 ஆயிரத்து 810 ரூபா தேவை!

இலங்கையில் ஒரு நபரின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு மாதந்தம் குறைந்த பட்சம், 13 ஆயிரத்து 810 ரூபா தேவை என மதிப்பிடப்பட்டுள்ளது.

மக்கள்தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளியியல் திணைக்களத்தால், வெளியிடப்பட்ட ஒக்ரோபர் மாதத்துக்கான தேசிய வறுமை மட்ட அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட அடிப்படையின்படி, கொழும்பு மாவட்டத்தில் தனது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய 14 ஆயிரத்து 894 ரூபாவுக்கும் அதிகமான தொகை தேவையாக உள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு மொனராகலை மாவட்டம் மிகக் குறைந்த செலவைக் கொண்டுள்ளதுடன் அந்த தொகை 13 ஆயிரத்து 204 ரூபாவாகும்.

# தலைமன்னார் துறைமுகத்தை தொழில்துறைமுகமாக மாற்றவும்!

## ஜனாதிபதி ஆலோசனை

இலங்கையில் உணவு மற்றும் போசாக்கு பாதுகாப்பை உறுதிப்படுத்தும் தேசிய திட்டம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற நிலையில், அது தொடர்பான கூட்டம் ஜனாதிபதி தலைமையில் பதுளையில் இடம்பெற்றது.

இதன் போது பதுளை மாவட்டத்தில் புயலால் ஏற்பட்ட பாதிப்பு தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இந்தக் கூட்டத்தின் பின் இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமானிடம் ஜனாதிபதி தலைமன்னார் துறைமுகத்தை தொழில்துறைமுகமாக மாற்ற இலங்கை மற்றும் இந்தியா ஆகிய இரு தரப்பினரும் கலந்துரையாடல்களை முன்னெடுக்குமாறு பணிப்புரை விடுத்துள்ளார்.



# எதிர்காலத்தில் மின்சாரமின்றி நாடு இருளில் மூழ்கக்கூடும்!

## பொறியியலாளர்கள் சங்கம் எச்சரிக்கை

எதிர்காலத்தில் கடும் மின்சார நெருக்கடி நிலை ஏற்படக்கூடும் என மின்சார பொறியியலாளர்கள் சங்கத்தின் தலைவர் நிஹால் வீரரட்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

நிலக்கரியை தாங்கிய 5 ஆவது கப்பலே நாட்டை வந்தடைந்துள்ளதாகவும், அது நிறைவடைந்தால் அடுத்த ஆண்டு மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் நாடு இருளில் மூழ்கக்கூடும் எனவும் அவர் எச்சரித்தார். தற்போதைய சூழலில் நிலக்கரியுடனான 24 கப்பல்கள் நாட்டை வந்தடைந்திருக்க வேண்டும் எனத் தெரிவித்த அவர், அதனை அரசாங்கம் தவறவிட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார். கடந்த வருடத்தை காட்டிலும் இந்த வருடத்தில் மழை வீழ்ச்சி குறைவடைந்தமையால் எதிர்காலத்தில் நீர் மட்டம் குறைவடைவதற்கான ஏது நிலைகள் உள்ளன எனக் குறிப்பிட்ட அவர், மின் உற்பத்தி செய்யப்படும் நீர்த்தேக்கங்களின் தற்போதைய நீர் மட்டம் 75 சதவீதம் என கணிப்பிடப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

# ஐஸ் போதைப்பொருள் உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் 6 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கைது!

இந்த வருடத்தில் இதுவரை ஐஸ் போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் 6 ஆயிரத்து 728 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர் எனத் தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபை தெரிவித்துள்ளது.

அத்துடன், ஐஸ் போதைப்பொருள் பாவனை அதிகரித்து வருவதாகவும் தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபை குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, நாட்டின் பல பகுதிகளில் பாடசாலை மாணவர்களின் பைகளை சோதனையிடும் வேலைத்திட்டம் வியாழக்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

5 கிராம் அல்லது அதற்கு மேற்பட்ட ஐஸ் போதைப் பொருளை வைத்திருப்பவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்படும் வகையில் விஷம், அபின் மற்றும் ஆபத்தான போதைப்பொருள் திருத்தச் சட்டத்தை நிறைவேற்றுவதற்கு அண்மையில் நாடாளுமன்றத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது.

# 15 ஆயிரத்துக்கும் அதிகமான படையினர் சேவையிலிருந்து வெளியேற விண்ணப்பம்!

சட்டரீதியாக முப்படைகளை விட்டு வெளியேறுவதற்கு பிரகடனப்படுத்தப்பட்டுள்ள பொது மன்னிப்புக் காலத்தில் 15 ஆயிரத்துக்கும் அதிகமான படையினர் சேவையிலிருந்து வெளியேற விண்ணப்பித்துள்ளனர்.

இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் ரவி ஹேரத் இதனைத் தெரிவித்துள்ளார். இதற்கமைய இதுவரை 15 ஆயிரத்து 891 படையினர், சட்டரீதியாக முப்படையிலிருந்து விடுபட விண்ணப்பித்துள்ளனர்.

அவர்களில் 32 பேர் அதிகாரிகள் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர்களில் 15 ஆயிரத்து 616 பேர் சேவையில் இருந்து விலகுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை பூர்த்தி செய்துள்ளனர்.

# தேர்தலை தாமதப்படுத்துவதற்கு ஆணைக்குழு ஆதரவளிக்காதாம்!

## நிமல் புஞ்சிஹேவா திட்டவட்டம்

எல்லை நிர்ணய பிரச்சினைகளை அடிப்படையாக கொண்டு தேர்தலை தாமதப்படுத்த ஆணைக்குழு ஒருபோதும் ஆதரவளிக்காது என தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா கூறியுள்ளார்.

கம்பஹாவில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றங்களில் மக்கள் பிரதிநிதிகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை, தெரிவு செய்யப்படாத அதிகாரிகளுக்கு வழங்க முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.



தேர்தல்களைத் தாமதப்படுத்த எல்லை நிர்ணய குழுவை பயன்படுத்த முடியாது என்றும் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

# 70 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் டெங்கு நோயால் பாதிப்படைவு!

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில், 70 ஆயிரத்து 826 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என தேசிய டெங்கு ஒழிப்புப்பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் இந்த காலப்பகுதிக்குள் 29 ஆயிரத்து 650 டெங்கு நோயாளர்கள் மாத்திரமே பதிவாகியிருந்தனர் என தேசிய டெங்கு ஒழிப்புப்பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருடத்தின் கடந்த சில மாதங்களில் 41 ஆயிரம் 176 டெங்கு நோயாளர்கள் அதிகளவில் பதிவாகியுள்ளனர்.

இந்த வருடம் அதிகளவான டெங்கு நோயாளர்கள் கொழும்பு, கம்பஹா, களுத்துறை மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்களில் பதிவாகியுள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## மைத்திரியும் ரணிலும்

நல்லாட்சி அரசின் காலத்தில் நடந்த சில விடயங்களை இப்போதாவது வெளிப்படையாக ஒப்புக்கொண்டு தகவல் வெளியிட்டு இருக்கின்றார் அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன. காலம் பிந்தியாவது அவர் உண்மையை ஒப்புக் கொண்டமை வரவேற்கத்தக்கதுதான்.

"நல்லாட்சி அரசாங்கத்தில் நானும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் இணைந்து செயற்படத் தீர்மானித்தோம். அப்போது எனக்கு ஜனாதிபதி பதவியும் ரணில் விக்கிரமசிங்கவுக்குப் பிரதமர் பதவியும் கிடைத்தன. எனக்கு எதிராகக் கடுமையான விமர்சனங்களை முன்வைத்தார்கள். என்னை அவமதித்தார்கள். என்னை அவமதித்து எனக்கு எதிராக சேறுபூசியவர்களுக்கு இப்போது ஜனாதிபதி பதவியும் இல்லை, பிரதமர் பதவியும் இல்லை" – என்று கூறியிருக்கின்றார் மைத்திரிபால சிறிசேன.

நல்லாட்சி அரசின் பிற்காலத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு இடையில் முரண்பாடுகள் முற்றின.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்குத் தெரியாமல் மஹிந்த ராஜபக்ஷவைப் பின் கதவால் பிரதமராக்கினார் மைத்திரியார். அந்தச் சட்ட விரோத அரசு 52 நாள்கள் நீடித்தது. நீதிமன்ற உத்தரவு மூலம் ஜனாதிபதி மைத்திரிக்குக் குட்டுப் போட வைத்தே ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்து பிரதமராகச் செயல்பட முடிந்தது.

அந்தச் சந்தர்ப்பத்தில் எல்லாம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை மோசமாகத் தூற்றினார் மைத்திரியார். ஆனால் அவருடன் அரசியல் ரீதியாக முரண்பட்டிருந்த ரணில் விக்கிரமசிங்க பதிலுக்கு அப்படி நடந்து கொள்ளவில்லை. ஜனாதிபதி என்ற முறையில் மைத்திரிபால சிறிசேனவுக்கு முழு மரியாதையை வழங்கியே செயற்பட்டார். தமது பகிரங்கக் கருத்து உதிர்ப்பில் மிகக் கவனமாக இருந்தார் ரணில். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக ஆட்சேபகரமான வார்த்தைகளையோ, கருத்துக்களையோ முன்வைப்பதை அவர் தவிர்த்துக் கொண்டார். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பிரதமர் ரணிலை மோசமாக விமர்சித்த போதும், நாவடக்கிக் கொண்டார் ரணில். அதையே இப்போது மைத்திரிபால சாடமாடையாக பெருந்தன்மையுடன் குறிப்பிடுகின்றார்.

"எனக்கு எதிராகக் கடுமையான விமர்சனங்களை முன்வைத்தார்கள். என்னை அவமதித்தார்கள். என்னை அவமதித்து எனக்கு எதிராக சேறுபூசியவர்களுக்கு இப்போது ஜனாதிபதி பதவியும் இல்லை, பிரதமர் பதவியும் இல்லை" – என்று கூறுவதன் மூலம் இப்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தன்னை அச்சமயத்தில் மோசமாக வையவில்லை என்பதை ஒப்புக்கொள்கின்றார் மைத்திரியார்.

அத்துணை அரசியல் நாகரீகம் பேணிய ரணிலுடன் தேவையில்லாமல் பகைத்து, இந்த நாட்டின் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பற்கு அற்புதமாக – அதிசயமாக – கிட்டிய வாய்ப்பையும் மைத்திரி போட்டு அடித்தார் என்பதுதான் துன்பியல் சரித்திரமாகும்.

## தேசிய டிஜிற்றல் கொள்கையை அபிவிருத்தி செய்தால் 500 கோடி அமெரிக்க டொலர்கள் வருமானம் கிட்டும்!

தேசிய டிஜிற்றல் கொள்கை துறையை அபிவிருத்தி செய்வதன் மூலம் நாடு 500 கோடி அமெரிக்க டொலர்களை ஈட்ட முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார ஸ்திரத்தன்மைக்கான தேசிய சபையில் இந்த விடயம் தெரியவந்துள்ளது. தகவல் தொழில்நுட்பத் துறை தொடர்பான பிரச்சினைகள் மற்றும் அதற்கான முன்மொழிவுகள் தொடர்பாக இதன் போது விவாதிக்கப்பட்டது.

தேசிய டிஜிற்றல் கொள்கையொன்று இல்லாத காரணத்தால் இலங்கை உலகின் ஏனைய நாடுகளை விட பின்தங்கியுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இதற்காக அறிஞர்கள், அரசு நிறுவனங்களின் தலைவர்கள், தனியார் நிறுவனங்களின் தலைவர்கள் என ஏராளமானோர் இணைந்துள்ளனர்.

## முகாமைத்துவத்தில் முதல் நிலை பெறும் மாணவருக்கு விருது யாழ். பல்கலையுடன் இலங்கை வங்கி உடன்படிக்கை கைச்சாத்து!

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடத்தினால் வழங்கப்படும் தொழில் நிருவாகமாணி, வணிகமாணி ஆகிய இரண்டு பட்டப் படிப்புகளிலும் முன்னணி பெறும் மாணவர்களுக்கு வருடாந்தப் பட்டமளிப்பு விழாவின் போது இலங்கை வங்கியினால் 'இலங்கை வங்கி விருது' வழங்கப்படவுள்ளது.

இதற்கான உடன்படிக்கையில் கைச்சாத்திடும் நிகழ்வு, கடந்த 15 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடாதிபதி பேராசிரியர் பா. நிமலதாசன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த உடன்படிக்கையில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சார்பில் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜாவும், இலங்கை வங்கியின் சார்பில் அதன் வட மாகாண உதவிப் பொது முகாமையாளர் வி. சிவானந்தனும் ஒப்பமிட்டனர். விருதுக்கான வைப்புச் சான்றிதழ் பல்கலைக்கழக நிதியாளர் கே. சுரேஸ்குமாரிடம் கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடத்தைச் சேர்ந்த பேராசிரியர்கள், துறைத் தலைவர்கள், விரிவுரையாளர்கள், பணியாளர்களும், இலங்கை வங்கியின் பிராந்திய உதவி முகாமையாளர்கள், கிளை முகாமையாளர்கள் மற்றும் வங்கியியலாளர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.




யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடத்தில் தொழில் நிருவாகமாணி, வணிகமாணி ஆகிய பட்டங்களைப் பெறும் மாணவர்களில் முதனிலை பெறும் மாணவர்களுக்கு வருடாந்தம் தங்கப் பதக்கத்தையும், சான்றிதழையும் வழங்குவதற்கென இலங்கை வங்கியினால் ரூபா பத்து இலட்சம் இலங்கை வங்கி திருநெல்வேலி கிளையில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் பெயரில் வைப்பிலிடப்பட்டுள்ளது. இந்த நிதியிலிருந்து ஒவ்வொரு வருடமும் இலங்கை வங்கி விருதுக்கான தங்கப் பதக்கமும், சான்றிதழும் வழங்கப்படவுள்ளன.

## மதுசார மற்றும் போதைப்பொருள் விழிப்புணர்வு குறும்படப் போட்டியில் விருதுகள் தட்டிச் சென்ற ஊடகக்கற்கைகள் துறை மாணவர்கள்



மதுசார மற்றும் போதைப்பொருள் தகவல் மையம் (Alcohol and Drug Information Center - ADIC) யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகக்கற்கைகள்துறையுடன் இணைந்து முன்னெடுத்த மதுசார மற்றும் போதைப் பொருள் விழிப்புணர்வுக் குறும்படப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான விருதுகள் வழங்கும் நிகழ்வு கடந்த புதன்கிழமை (14.12.2022) யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.

'இளைஞர்கள் மத்தியில் மது மற்றும் போதைப்பொருள் பாவனையை ஊக்குவிப்பதில் திரைப்படங்கள் எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்துகின்றன' என்ற கருப்பொருளை அடிப்படையாகக் கொண்டு, அதனைப் பலவீனப்படுத்தும் நோக்கில் இக்குறும்படப் போட்டி நடாத்தப்பட்டிருந்தது. இக் குறும்படப் போட்டிக்காக முப்பது குறும்படங்கள் மாணவர்களால் தயாரிக்கப்பட்டிருந்த நிலையில், அவற்றில் எட்டு சிறந்த குறும்படங்கள் தெரிவு செய்யப்பட்டு விருதுகள் வழங்கப்பட்டன.

இக்குறும்படப் போட்டியில் செல்வகுமார் ரினோஷன் முதலாம் இடத்தினைப் பெற்று ரூபா 50,000 பணப்பரிசினையும் டி.திஷான் தலைமையிலான குழுவில் டி. தவதேவன், என். நிரோஷாந், ஆர்.தர்ஷினி ஆகியோர் இரண்டாம் இடத்தினைப் பெற்று ரூபா 30,000 பணப்பரிசினையும், ஆர்.பெனயா மூன்றாம் இடத்தினைப் பெற்று ரூபா 20,000 பணப்பரிசினையும் பெற்றுக் கொண்டனர்.

இந் நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் எஸ். சிறிசற்குணராஜா, கலைப் பீடாதிபதி பேராசிரியர் கே. சுதாகர், ஊடகக் கற்கைகள் துறைத் தலைவர் பேராசிரியர். எஸ். ரகுராம், மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் மையத்தின் நிர்வாக இயக்குனர் புபுது சுமனசேகர ஆகியோர் அதிதிகளாகக் கலந்துகொண்டனர்.



## காலநிலை மாற்றம் காரணமாக உயிரிழந்த மாடுகளுக்கு எவ்வித நோய்களும் இல்லை!

### கால்நடை வைத்தியர் உதயராணி தெரிவிப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட காலநிலை மாற்றம் காரணமாக சுமார் 271 மாடுகள் இறந்துள்ள போதிலும் மாடுகளுக்கு எவ்வித நோய்களும் இல்லை என ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த மாவட்ட கால்நடை அபிவிருத்தி திணைக்கள பிரதி பணிப்பாளர் வைத்தியர் உதயராணி குகேந்திரன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதேவேளை கடந்த சில நாள்களாக இறைச்சி வகைகளை உணவாக உட்கொள்ள விதிக்கப்பட்டிருந்த தடையும் நீக்கப்பட்டுள் ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளைக் கவர புதிய படகு சேவை!




உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுக்கு புதிய பொழுதுபோக்கு சேவைகள் வழங்கப்படும் வகையில் பத்தரமுல்ல, தியவன்னா ஓயாவில் 'தியத்மா' ஓய்வு படகு சேவை வியாழக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் ஆலோசனையின் பேரில் காணி நிரப்புதல் மற்றும் அபிவிருத்தி செய்யும் கூட்டுத்தாபனத்தால் இந்தப் பொழுதுபோக்கு படகு சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அங்கு பேசிய நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, கொழும்பு நகரம் மற்றும் புறநகர் பகுதிகளில் இத்தகைய பொழுதுபோக்கு சேவைகள் உள் நீர்வழிகளில் படகு சேவை ஆரம்பிக்க எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நாடு பொருளாதார நெருக்கடியைச் சந்தித்து வரும் நேரத்தில் அந்நியச் செலாவணியை அதிகரிக்க இந்த நாட்டுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கும், அவர்கள் நாட்டிலே தங்கியிருக்கும் காலத்தை அதிகரிப்பதற்கும் அவர்கள் நாட்டிலே தங்கியிருக்கும் காலத்தை அதிகரிப்பதக்கும் உரிய வேலைத்திட்டம் ஒன்றைச்செய்ய வேண்டும் என்று அமைச்சர் தெரிவித்தார். அந்த சுற்றுலா பயணிகளுக்கு பொழுதுபோக்கிற்காக இதுபோன்ற பயணிகள் படகு சேவைகள் மிகவும் முக்கியமானது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த படகு 13 மீற்றர் நீளமும் 4 மீற்றர் அகலமும் கொண்டதுடன் தியத்மா என்றும் பெயரிடப்பட்டது. இங்கு சுமார் 30 பேருக்கு வசதி செய்யப்பட்டுள்ளது மற்றும் கலந்துரையாடல்கள், மாநாடுகள், நட்பு சந்திப்புகள் போன்றவற்றை நடத்தும் திறனையும் இது கொண்டுள்ளது. இந்த முழு குளிரூட்டப்பட்ட படகில் சேவையைப் பெற்றுக்கொள்வதற்கு ஒரு மணி நேரத்திற்கு 20 ஆயிரம் ரூபா ஆகும்.

இந்த பொழுதுபோக்கு படகு சேவை ஆரம்பிக்கப்பட்டு சில மணி நேரங்களில் இந்தப் படகை 9 பேர் முன்பதிவு செய்துள்ளதாக காணி நிரப்புதல் மற்றும் அபிவிருத்தி செய்யும் கூட்டுத்தாபனம் கூறுகிறது.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்னாண்டோ, நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி மதுர விதானகே, காணி நிரப்புதல் மற்றும் அபிவிருத்தி செய்யும் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஹிரான் பாலசூரிய, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர், ரஜீவ் சூரியராச்சி மற்றும் பலர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# ஜனநாயக மக்கள் காங்கிரஸின் அங்குரார்ப்பண நிகழ்வு இன்று!



ஜனநாயக மக்கள் காங்கிரஸ் கட்சியின் அங்குரார்ப்பண நிகழ்வு இன்று(சனிக்கிழமை) கொழும்பில் இடம் பெறவுள்ளது.

முன்னாள் பிரதியமைச்சர் பிரபா கணேசனின் தலைமையிலான இந்த கட்சிக்கு தபால்பெட்டி சின்னம் வழங்கப்பட்டுள்ளது.

பலவருட செயற்பாடுகளுக்கு மத்தியில் தேர்தல்கள் ஆணைக்குழுவால் அரசியல் கட்சியாக அங்கிகாரம் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சிறையிலுள்ள முன்னாள் போராளிகள் 31 பேரை விடுதலை செய்ய வேண்டும்!

## சம்பிக்க ரணவக்க வலியுறுத்து



தற்போது சிறைச்சாலையில் உள்ள முன்னாள் போராளிகளை விடுதலை செய்ய வேண்டும் என 43 ஆவது படையணியின் தலைவர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற சர்வகட்சி தலைவர்களுடனான மாநாடு தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

சர்வகட்சி தலைவர்கள் மாநாட்டில் இராணுவத்தினர் வசமுள்ள காணிகள் விடுக்கப்பட வேண்டும், சிறைச்சாலைகளில் உள்ள முன்னாள் போராளிகள் விடுதலை செய்யப்பட வேண்டும், காணாமலாக்கப்பட்டோர் உள்ளிட்ட பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டுள்ளன.

மேலும், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியால் இந்த பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

யுத்தம் நிறைவடைந்து 13 வருடங்களாகின்றன. தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்குப் பின்னர் அந்த இயக்கத்துக்குத்தலைமை ஏற்றிருந்த குமரன் பத்மநாதன் வெளியில் இருக்கிறார்.

ராமன், நகுல், கருணா போன்றவர்களும் வெளியில் இருக்கிறார்கள். இவ்வாறான நிலையில் சிறைச்சாலையில் உள்ள 31 முன்னாள் போராளிகளை விடுதலை செய்ய வேண்டும் எனவும் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், சிறைச்சாலையில் உள்ள இராணுவ வீரர்களையும் விடுதலை செய்ய வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அரசமைப்பு தொடர்பில் இதன்போது பேசப்பட்டது. அது தொடர்பில் நாடாளுமன்றத்துக்குள்ளேயே தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டும்எனவும்அவர்தெரிவித்துள்ளார்.



காலைக்கதிர் Kalaikkathir

# எல்லை நிர்ணய அறிக்கையின் படி தேர்தலை நடத்த ஆறு மாதங்கள் காலம் தாமதமாகும்!

## எல்லை நிர்ணய குழுவின் தலைவர் தெரிவிப்பு



உள்ளூராட்சி மன்றங்களுக்கான எல்லை நிர்ணய அறிக்கைக்கு அமைய தேர்தலை நடத்துவதாக இருந்தால், தேர்தலை இன்னும் ஆறு மாத காலத்துக்கு மேல் பிற்போட நேரிடும்.

தற்போதைய உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முறைக்கு அமைய தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு உரிய காலத்தில் தேர்தலை நடத்தலாம்.

அதற்கு எல்லை நிர்ணய குழுவின் பரிந்துரைகள் செல்வாக்கு செலுத்தாது என எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

கொழும்பில் இரவு இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தொகுதி எல்லை நிர்ணய செயற்பாடுகள் தொடர்பில் அனைத்து அரசியல் கட்சி பிரதிநிதிகளுடன் சந்திப்பு எதிர்வரும் 20 ஆம் திகதி நில அளவை திணைக்கள கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

எல்லை நிர்ணயம் தொடர்பில் அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புக்களின் ஆலோசனை பெற்றுக்கொள்ளப்படும்.

உள்ளூராட்சி மன்றங்களின் தற்போதைய 8 ஆயிரம் 800 உறுப்பினர் எண்ணிக்கையை உள்ளூராட்சி மன்றங்களுக்கான தொகுதி எல்லை நிர்ணய அறிக்கைக்கையின் பிரகாரம் 5 ஆயிரத்து 100 முதல் 5 ஆயிரத்து 200 வரை குறைத்துக்கொள்ள மதிப்பிடப்பட்டுள்ளது.

நிர்ணய அறிக்கை 2023 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி சமர்ப்பிக்கப்படும், அதனைத் தொடர்ந்து மீளாய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்படும்.

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தொகுதி எல்லை நிர்ணய அறிக்கையின் பரிந்துரைகளின் பிரகாரம் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதாக இருந்தால் தேர்தலை இன்னும் ஆறு மாத காலத்துக்கு அதிகமான காலம் பிற்போட நேரிடும். ஏனெனில் முன்வைக்கப்படும் பரிந்துரைகளை செயற்படுத்த உரிய கால அவகாசம் வேண்டும்.

தற்போதைய உள்ளூராட்சி தேர்தல் முறைக்கு அமைய தேர்தலை உரிய காலத்தில் நடத்த முடியும். எல்லை நிர்ணய அறிக்கை உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கு தடையாக அமையாது. – என்றார்.

தேர்தல் முறைமை திருத்தம் செய்யப்பட வேண்டும் என ஜனாதிபதி ரணில் அறிவித்தமையைத் தொடர்ந்து உள்ளூராட்சி மன்றங்களின் வட்டார எல்லை நிர்ணயத்தை மேற்கொள்வதற்காக பிரதமர் தினேஷ் குணவர்தன கடந்த நவம்பர் மாதம் எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தலைமையில் நால்வர் அடங்கிய குழுவை நியமித்தார்.

கடந்த நவம்பர் மாதம் முதலாம் திகதி முதல் அமுலாகும் வகையில் நியமிக்கப்பட்ட இந்தக் குழு எதிர்வரும் 2023 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி குழு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறான பின்னணியில் நகர சபை மற்றும் பிரதேச சபை தேர்தல் சட்டத்தின் பிரகாரம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சரின் அதிகாரத்துக்கு அமைய ஏற்கனவே ஒரு வருட காலம் பிற்போடப்பட்டுள்ள உள்ளூராட்சிமன்ற சபைத் தேர்தலை பிற்போடும் நோக்கத்தில் அரசாங்கம் எல்லை நிர்ணய குழுவை நியமித்துள்ளது என பிரதான எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளன.

அரசமைப்பு மற்றும் நாட்டின் பொது கோட்பாடுகளுக்கு அமைய உரிய காலத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த தேசிய தேர்தல்கள் ஆணைக் குழுவிற்கு அறிவிக்குமாறு எதிர்க்கட்சியின் உறுப்பினர்களான ஜி.எல். பீரிஸ், ரஞ்சித் மத்தும பண்டார, தயாசிறி ஜயசேகர, எம்,ஏ.சுமந்திரன் மற்றும் அநுர பிரியதர்ன யாப்பா ஆகியோர் கடந்த திங்கட்கிழமை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வவுனியா வைத்தியசாலை சுற்றுவட்ட வீதியில் சிரமதானப்பணி முன்னெடுப்பு

வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையின் பின்பகுதியான சுற்றுவட்ட வீதியைத் துப்புரவு செய்யும் நடவடிக்கை நேற்று (வெள்ளிக்கிழமை) காலை தொடக்கம் மதியம் வரை முன்னெடுக்கப்பட்டிருந்தது.

ஈரோஸ் அமைப்பின் வவுனியா மாவட்ட இளைஞர் அணியினரால் இந்த நடவடிக்கை இடம்பெற்றிருந்த துடன் வடிகான்கள், பற்றைகள் என்பன துப்புரவு செய்யப்பட்டதுடன், நகர சபையின்உதவியுடன்குப்பைகளும்அகற்றப்பட்டிருந்தன.

இந்த நடவடிக்கையில் ஈரோஸ் அமைப்பின் வவுனியா மாவட்ட இளைஞர் அணியினர் 20 இற்குமேற்பட்டவர்கள்கலந்துகொண்டிருந்தனர்.






கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# பாட்டும் நானே? பாவமும் நானே!

**'கம்பவாரிதி' இலங்கை ஜெயராஜ் தமது 'உகரம்' இணையத்தளத்தில் 'பாட்டும் நானே! பாவமும் நானே!' என்ற தலைப்பில் வாராந்தம் வரையும் கேள்வி - பதில் பகுதி 'காலைக்கதிர்' நாளிதழில் ஒவ்வொரு வாரமும் வெளியாகி வாசகர்களின் அறிவுக்குத் தீனியாகிறது.**




**1. கேள்வி :-** தமிழ்நாட்டுப் பிரபலங் கள் பற்றி நீங்கள் கருத்துரைத்ததும், அதுபற்றி கடுமையான விமர்சனங்களோடு அங்கு நூற்றுக்கணக்கான 'கொமென்ஸ்' வருகின்றன. எங்கள் நாட்டுத் தலைவர்கள் பற்றி நீங்கள் எழுதினால் அப்படியான 'கொமென்ஸ்' ஏதும் வருவதில்லையே காரணம் என்ன?

**பதில் :-** அவர்களைப் பின்பற்றுவோரின் தொகைதான் அதற்குக் காரணம். உயிரையும் கொடுக்கத் தயாராய் இருக்கும் தொண்டர்கள் அங்குள்ள தலைவர்களுக்கு அதிகம். இங்கு அப்படி இருப்பதாய்த் தெரியவில்லை. இது ஒரு காரணம். அடுத்தது இங்குள்ள தலைவர்கள் தம்மைப் பற்றி எழுதப்படும் விமர்சனங்களைத் தாமே படிப்பதில்லை என்பது மற்றொரு காரணம். அந்த அளவில்தான் எங்கள் நாட்டு நிலமை இருக்கிறது. எனக்குத் தெரிந்து இந்தக் கேள்வி பதில் பகுதியினை இரண்டு தலைவர்கள்தான் ஒழுங்காகப் படித்து வருகிறார்கள். ஒருவர், கிளிநொச்சி நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் அவர்கள். மற்றவர், முன்னாள் வடமாகாணசபை எதிர்க் கட்சித் தலைவர் தவராஜா அவர்கள். இவர்கள் எனது எழுத்துக்களை ஆதரித்தோ, எதிர்த்தோ அவ்வப்போது என்னிடம் கருத்துரைப்பார்கள். மற்றவர்களிடம் ஆட்டம், அசைவு எதுவும் தெரிவதில்லை. அவர்கள் தலைமைத் தகுதி பெற இன்னும் பலகாலம் இருக்கிறது என்று நினைக்கிறேன்.

**உலகநாதரின்:- சத்தியமான வார்த்தை.**

**2. கேள்வி:-** ஐயா! வணக்கம். உங்களது பேச்சின் ரசிகன் நான். தமிழ்நாட்டில் நீங்கள் எங்கு பேசினாலும் நான் விடுவதில்லை. உங்கள் பேச்சில் இருக்கும் கருத்தாழத்தை விட, அதில் தொனிக்கும் சத்தியம் எனக்கு மிகவும் பிடிக்கும். இப்போது அதே சத்திய நோக்கோடு இணையப்பொதுவெளிகளில் துணிந்து பலவிடயங்களை எழுதி வருகிறீர்கள். பேச்சைப் போலவே எழுத்தும் உங்களுக்குக் கைவரப்பெற்றிருப்பது கண்டு ஆச்சரியப்படுகிறேன். உள்ளத்தில் உள்ள உண்மை ஒளியின் வெற்றி அது. ஐயா, தற்போது நீங்கள் பொதுவெளியில் எழுதுவதால் பலவிதமானவர்களும் அதைப்படித்து விட்டு இஷ்டப்படி உங்களை விமர்சனம் செய்கிறார்கள். அவற்றைப் படிக்கக் கஷ்டமாக இருக்கிறது. உங்களை அவர்கள் கொச்சைப்படுத்துவதைப் பார்த்து மனவருத்தப்படுகிறேன். இந்த வேலை உங்களுக்கு வேண்டாம் விட்டுவிடுங்களேன்.

**பதில்:-** அன்பு நண்பா! என்னில் தாங்கள் கொண்ட நம்பிக்கைக்கும், அன்புக்கும் ஆயிரம் கோடி நமஸ்காரங்கள். என்மேல் அன்புகொண்ட உங்களைப் போன்ற பலரோடு, என் மாணவர்கள் சிலரும் கூட இதைப்போலவே சொல்லி வருகிறார்கள். உங்களைப் போன்றவர்கள் இல்லாவிட்டால் ஒருவேளை எனது இந்த எழுத்து முயற்சிகளை நிறுத்தினாலும் நிறுத்தியிருப்பேன். என்மேல் இவ்வளவு அன்பும், நம்பிக்கையும் கொண்ட இத்தனை பேர் இருக்கையில் அவர்களுக்காகவேனும் நான் தொடர்ந்து மனதில் உதிக்கும் சத்தியங்களை எழுத வேண்டாமா என்று தோன்றுகிறது.

ஒருவரை இழிவுசெய்து விமர்சிப்பதன் மூலம் அவரது உண்மைக் குரலை அடக்கிவிடலாம் என்று இப்போது பலர் நினைக்கிறார்கள். அதற்குப் பயந்தால், சத்தியத்தை உரைக்க இவ்வுலகத்தில் ஆளில்லாமல் போய்விடும். உண்மையைச் சொல்லப்போய் நான் ஏன் இழிவுபட வேண்டும்? என நினைப்பது, ஆணவத்தின் வெளிப்பாடு. அதனால்தான் பாரதி, ஒரு சமூக மனிதனுக்கான வரைவினைச் செய்யும் போது, முதல் தகுதியாக 'நான் எனும் ஆணவம் தள்ளலும்' என்றனன். அதனைத் தள்ளினால்த்தான் 'இந்த ஞாலத்தைத் தான் எனக் கொள்ளலும்' என்ற பாரதி சொன்ன அடுத்த இலட்சியத்தை நாம் அடையமுடியும். நான் குருவாய்ப் போற்றும் பாரதி சொன்ன இந்த உண்மைகளை விளங்கியதால்தான், தூற்றுபவர்களுக்கு அஞ்சாமல் நான் நினைப்பதை எழுதி வருகிறேன்.

நான் சொல்லும் உண்மைகளை ஜீரணிக்க முடியாமலும், அவற்றிற்குப் பதில் சொல்ல முடியாமலும் இருப்பவர்கள், என்னைத் தூற்றுவதால் எனது வாயை அடைக்க முற்படுகின்றனர், என்னில் இல்லாத பழிகளை எவராலும் என்மேல் ஏற்றமுடியாது. அதே போல என்னில் இருக்கும் பழிகளை எவராலும் துடைக்கவும் முடியாது. இவ் உண்மையை நான் நன்கு அறிவேன். அதனால் என்மேல் சொல்லப்படும் பழிகளில் உண்மை இருந்தால், அதனைத் திருத்திக் கொள்ள முயல்கிறேன். இல்லாவிட்டால் அதனைத் தூசாய்த் துடைந்தெறிந்துவிட்டு என் பாதையில் நடக்கிறேன். இந்த மனநிலை வந்துவிட்டபடியால்த்தான், சிலர் கூறும் தூற்றுதலால் என் மனமோ, அறிவோ சிறிதளவேனும் பாதிக்கப்படுவதில்லை. அப்படித் தூற்றி எழுதும் அத்தனைபேர் கருத்துக்களையும் கூட பொறுமையாய்ப் படித்து 'லைக்' செய்து வருகிறேன்.

ஏதோ ஞானி போலப் பேசுவதாய் நினைப்பீர்கள். அப்படியில்லை! எனக்கு என்னைத் தெரிவதால் தூற்றுதலாலும் போற்றுதலாலும் பாதிக்கப்படுவதை முடிந்தவரை தவிர்த்து வருகிறேன். என்னைத் திட்டுவதற்காகவேனும் என் எழுத்துக்களைப் படிக்கிறார்களே என்பதில் எனக்கோர் மகிழ்ச்சி. அதைத் தெரிவிக்கத்தான் அந்த 'லைக்'.

நோய்க்குத் தாய் தருகிற கசப்பு மருந்தைக் குடித்துவிட்டு, தாயைத் திட்டுகிற பிள்ளைகளைப் போல்த்தான் இவர்களும். நோய் மாறி சுகம் வருகிறபொழுது, தாயின் அருமையும், தாய் தந்த மருந்தின் அருமையும் குழந்தைக்குத் தானாகப் புரியத் தொடங்கும். அதேபோல தூற்றி எழுதிய கரங்களே ஒருநாள் என்னைப் போற்றி எழுதவும் செய்யும். என்மேல் அன்பு கொண்ட உங்களைப் போன்றோரும் இதனை விளங்கி என்னைப் பலம் செய்யவேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

**உலகநாதரின்:- ,நிமிர்வைக் கண்டு வணங்குகிறேன்.**

**3. கேள்வி:-** உங்களைத் தமிழ்நாட்டில், 'சங்கி' என்று பலரும் சொல்லத் தொடங்கியிருக்கிறார்களே. அது பற்றி என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

**பதில்:-** அறியாமைக்கு ஓர் அளவேயில்லையா? இது தமிழ்நாட்டில் தொடங்கியிருக்கும் ஒரு புதிய நோய். எங்கள் ஈழத்தில் இந்த வார்த்தையே இல்லை. 'சங்கி' என்ற வார்த்தையையே அண்மைக்காலமாகத்தான் கேள்விப்பட்டு வருகிறேன். நான் விசாரித்த அளவில் அந்த வார்த்தைக்குப் பலரும் பலவிதமான அர்த்தங்களையும் சொல்லி வருகிறார்கள். அச்சொல்லின் அர்த்தம் 'இந்து சமயப் பற்றாளன்' என்பதாயும் ஒருவர் சொன்னார். அதுதான் அச்சொல்லுக்கான அர்த்தமானால் நிச்சயம் நான் ஒரு 'சங்கி'தான். மற்றும்படிக்கு நான் சங்கியா இல்லையா என்பது பற்றி எனக்கே தெரியவில்லை.

**உலகநாதரின்:- இவர் சங்கப்புலவரா? சங்கிப்புலவரா? ஹி..ஹி..**

**4. கேள்வி:-** நீங்கள் ஒரு பழமைவாதியா?

**பதில்:-** மேற்படி விடயம் பற்றி ஆணித்தரமாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நான் பழமைவாதி என்பது உண்மைதான். நம் மூதாதையர்கள், பலதுறைகளிலும் அறிவுச் சிகரங்களைத் தொட்டிருக்கிறார்கள். நம் பழைய நூல்களைப் படித்தால்த்தான் அது தெரியவரும். எனது ஆசிரியர்களின் துணையால் அதனைத் தெரிந்து கொண்டதால், நான் பழமையைப் போற்றுகிறவனாகத்தான் இருக்கிறேன். புதுமை என்று சொல்லப்படும் பல விடயங்கள் கவர்ச்சியூட்டுவனவாக இருக்கின்றனவே தவிர, உணர்வு சார்ந்த உலக வளர்ச்சிக்கு அவை உதவுவதில்லை. நன்மை நோக்கி வளர்ப்பதாய்க் காட்டி, அப்புதுமைகள் உலகை அழிவுப்பாதையில் இட்டுச் செல்வனவாகவே உணர்கிறேன். அதனால் என்னைப் பழமைவாதி என்று சொல்லிக் கொள்வதில் நிச்சயம் நான் பெருமைப்படுகிறேன்.

**உலகநாதரின்:- ஆளைப் பார்த்தாலே அது தெரிய வருமே.**

**5. கேள்வி:-** உங்களை தமிழின் மீதும் தமிழினத்தின் மீதும் பற்றில்லாதவன் என்று சிலர் சொல்லத் தொடங்கியிருக்கிறார்கள். அதுபற்றி என்ன சொல்ல நினைக்கிறீர்கள்?

**பதில்:-** தமிழின்மீது பற்றுள்ள எவனும் தமிழினத்தின் மீதும் பற்றுள்ளவனாகத்தான் இருப்பான். நான் தமிழின்மீது பற்றுள்ளவனா? இல்லையா? என்பதை உலகம் அறியும். தமிழினத்தின் மீது பற்று என்பது, குறித்த கட்சிகள் காட்டும் கொள்கைகள் மீதான பற்றாய் இருக்கவேண்டும் என்ற அவசியம் இல்லை. அவர்களில் பலர் தமிழ் உணர்வூட்டுவதற்குப் பதிலாகத் தமிழ் வெறியூட்டுகிறார்கள். அவர்களின் வழி நிற்பதுதான் தமிழின் மீதான பற்று, தமிழினத்தின் மீதான பற்று என்றால், என்னை அப்பற்றுக்கள் இல்லாதவன் என்றே சொல்லி விட்டுப் போகட்டும் அதுபற்றி எனக்குக் கவலையில்லை.

**உலகநாதரின்:- 'பற்றுக பற்றற்றான் பற்றினை.' ச்சும்மா. ச்சும்மா. ஹி..ஹி..**

**6. கேள்வி:-** நீங்கள் மூடக்கொள்கைகளில் நம்பிக்கை கொண்டவராமே?

**பதில்:-** என்னை மூடக்கொள்கைகளில் நம்பிக்கை கொண்டவன் என்று சிலர் சொல்வதை நான் அறிவேன். பகுத்தறிவாளர்கள் என்றும் படித்தவர்கள் என்றும் சொல்லிக்கொள்ளும் பலர், 'நரி தன் வாலால் கடலை அளந்தாற்போல' தமது அறிவின் விஸ்தாரத்திற்கேற்ப நமது உயர் பண்பாட்டுக் கூறுகளை மூடத்தனங்கள் என வர்ணித்து வருகிறார்கள் அவர்கள் இறை நம்பிக்கை, கற்பு, ஒழுக்கம், ஆசாரம், குருபக்தி போன்றவற்றை எல்லாம் கூட, மூடக் கொள்கைகள் என்ற 'லிஸ்டில்' சேர்த்து விட்டார்கள். அவையெல்லாம் மூடக் கொள்கைகளானால் நானும் மூடக்கொள்கைகளில் நம்பிக்கை கொண்டவன்தான்.

**உலகநாதரின்:- இனி இவரை உலகம் மூடக் கொள்கை வாரிதி என்று அழைப்போமாக.ஹி..ஹி..!**

**7. கேள்வி:-** சமஸ்கிருதம் படிக்கவேண்டும் என்று நீங்கள் சொல்லிவிட்டீர்களாம். அதனால் நீங்கள் தமிழ்த் துரோகியாம். புலம்பெயர் நாடுகளில் இப்படி ஓர் அலை ஓடிக் கொண்டிருப்பதைப் பற்றிக் கேள்விப் பட்டீர்களா?

**பதில்:-** அலை மட்டுமா ஓடுகிறது? எனக்கு அழகழகான கேலிச்சித்திரங்கள் வேறு போடுகிறார்கள். என்னைக் குற்றம் சாட்டுவதற்கான அடிப்படைத் தகுதிகள்கூட இல்லாத அறிவிலிகளிடம் இருந்து எழும் இந்தக் குற்றச்சாட்டைக் கேட்டு நகைப்பதைத் தவிர நான் வேறென்ன செய்ய?

வாழ்வுதேடிப் பல நாடுகளுக்கும் சென்றிருக்கும் இவர்களில் பலபேரது பிள்ளைகளுக்கு, தமிழே சரியாய்ப் பேச வருவதில்லை. என் பிள்ளைக்கு ஆங்கிலம், டொச், பிரெஞ்ச், ரஷ்ய, சீன, ஜப்பானிய மொழிகள் எனப் பல மொழிகளும் பேச வரும் என்று பெருமை பேசிக்கொள்ளும் இவர்கள். சமஸ்கிருதம் படித்தால் அது தமிழ்த்துரோகம் என்கிறார்கள். அதுதான் வேடிக்கை!

அறியாமைக்கு ஓர் அளவே இல்லையா? இவர்களுக்கு என்னை மட்டும் அல்ல தங்களையே சரியாய்த் தெரியவில்லை. நம் உயர் தமிழ்ப்புலவர்கள் எவரும் வடமொழியை எதிர்க்கவில்லை. வேதங்கள், ஆகமங்கள், தர்மசாஸ்திரங்கள், இதிகாசங்கள் என வடமொழி நமக்குத் தந்திருக்கும் சொத்துக்கள் பற்பல. அம்மொழி நம் தமிழிற்கு இனமான மொழி. கலை, கலாசாரம், பண்பாடு, நாகரிகம், சமயம், தத்துவம் என, பலவற்றாலும் நம் தமிழ்மொழியோடு ஒன்றுபட்டு உறவான வடமொழியைப் படிப்பது குற்றமாம். மேற்சொன்ன எந்த ஒன்றாலும் நமக்கு இனமாகாத வேற்று மொழிகளைப் படிப்பது பெருமையாம். மூடர்கள் முன் மொழிகிறார்கள்!

தமிழ் இலக்கணம் செய்த தொல்காப்பியரே மற்றைய மொழிகளிலிருந்து வடமொழிக்குத் தனி அங்கீகாரம் அளிக்கும் உண்மை, இவர்களுக்குத் தெரியவா போகிறது? காசும், காரும் கையில் இருப்பதால் எதைப்பற்றியும் பேசலாம் என்று நினைக்கிறார்கள். அவர்களின் கருத்தைத் தூசு தட்டுவது போலத் தட்டித் தொலைக்க வேண்டியதுதான்.

**உலகநாதரின்:- வாரிதியார் இனி வெளிநாடுகளுக்குப் போனமாதிரித்தானுங்கோ.**




உள்ளம் மகிழ உங்களுக்கு என் வணக்கங்களை உரைக்கின்றேன். இவ்வாரத்துடன் 'பாட்டும் நானே! பாவமும் நானே!' பகுதி நூறாவது வாரத்தைத் தொடுகிறது. அந்த வெற்றிக்கு வழி வகுத்தவர்களில் முதன்மையானவர் 'காலைக்கதிர்' ஆசிரியர் வித்தியாதரன் அவர்கள்தான். அதற்காக அவருக்கு நான் எனது நன்றியை முதலிலேயே சொல்லி விடுகிறேன். சர்ச்சைக்குரிய எனது பதில்களையும், உயர் தலைவர்கள் மீதான எனது விமர்சனங்களையும் அச்சமின்றி ஓர் எழுத்தைக் கூட மாற்றாமல் வெளியிட்ட அவரது துணிவை நான் பாராட்டாமல் இருக்க முடியாது.

பத்திரிகைகளுக்கு நான் எழுதத் தொடங்கிப் பட்டபாடு கொஞ்சநஞ்சமல்ல. பத்திரிகை ஆசிரியர்களாலும், எழுத்துப்பற்றி ஒன்றுமே தெரியாத, பத்திரிகைகளின் பணக்கார நிர்வாகிகளாலும், எனது எழுத்து முயற்சிகள் பலதரமாய் அவமானப் படுத்தப்பட்டன. நானும் கூடத்தான்!

முன்பு யாழில், 'முரசொலி' பத்திரிகை வந்த ஆரம்ப காலத்தில், அதன் ஆசிரியர் திருச்செல்வம் வலிந்து வேண்டிக்கேட்க 'குடுமிப்பிடி' என்ற தலைப்பில் சர்ச்சைக்குரிய ஓர் பத்தியை எழுதத் தொடங்கினேன். புகழ்பெற்ற ஒரு பேராசிரியர் பற்றி நான் எழுதிய விமர்சனத்தால், அவர் அழுத்தம் கொடுக்க, அதற்கு அஞ்சிய பத்திரிகை ஆசிரியர் சொல்லாமல் கொள்ளாமல் அப்பத்தியை நிறுத்தினார். இது எனது முதல் அனுபவம்.

அதன் பிறகு தினக்குரல் பத்திரிகை வெளி வந்த ஆரம்பகாலத்தில் 'பழம் பண்டிதரின் பகிரங்கக் கடிதம்' எனும் தலைப்பில் நான் எழுதி வந்த கடிதங்களின் வரிசையில் மறைந்த பேராசிரியர் சிவத்தம்பி அவர்களை விமர்சித்து ஓர் கடிதம் வரையப்போக, பேராசிரியரின் சார்பால் அதை வெளியிடுவதில் அப்பத்திரிகையின் அப்போதைய ஆசிரியர் தனபாலசிங்கம், என்னென்னவோ குள்ள வேலைகளை எல்லாம் செய்து, என்னைக் கோபப்படுத்தினார். அதனால் நானாக அக்கடிதத் தொடரினை நிறுத்தினேன். பின்னர் அக்கடிதங்களை இந்தியாவின் 'நர்மதா' பதிப்பகம் நூலாய் வெளியிட்டது. இது எனது இரண்டாவது அனுபவம்.

அதன் பின்னர் 'வீரகேசரி' வாரமலரில் ஏதாவது எழுதுங்கள் என்று அதன் அப்போதைய ஆசிரியர் பிரபாகன் விரும்பிக் கேட்டுக்கொள்ள, 'அதிர்வுகள்' என்ற தலைப்பில் ஓர் பத்தியினைத் தொடராக எழுதத் தொடங்கினேன். வீரகேசரியில் வந்த சம்பிரதாயபூர்வமான உப்புச்சப்பற்ற பகுதிகளிலிருந்து இப் பத்தி வேறுபட்டதால் பலரும் அதை ரசித்துப் படிக்கத் தொடங்கினார்கள். அதில் நான் எழுதிய 'தாயோடு கல்வி போயிற்று' என்ற சர்ச்சைக்குரிய யதார்த்த உண்மை கூறும் கட்டுரை, சில பெண் விடுதலைக்காரர்களின் கோபத்திற்கு ஆளாக, அவர்களின் அழுத்தத்தால் வீரகேசரி நிர்வாகத்தாரில் சிலர் தலையிட, அவர்களின் தலையீட்டை எதிர்க்கத் துணிவில்லாத ஆசிரியர் பிரபாகன் அப்போதும் எனக்கு விளக்கம் ஏதும் சொல்லாமலே அத்தொடரை நிறுத்தினார். இது எனது மூன்றாவது அனுபவம். சிலகாலத்தின் பின் நான் வீரகேசரியில் எழுதிய கட்டுரைகளை இந்தியாவில் 'ஆனந்தவிகடன்' பதிப்பகம் நூலாய் வெளியிட அந்நூலுக்குப் பெரும் வரவேற்புக் கிடைத்தது.

அதன் பின்னர் வீரகேசரி நிர்வாகம் பழைய வாரமலர் ஆசிரியரை நீக்கி ஸ்ரீகஜனை அதற்கு ஆசிரியராக்கியது. ஆசிரியரானதும் ஸ்ரீகஜன் 'தினக்குரல்' ஜெயேந்திரன் ஊடாக, தங்கள் பத்திரிகையில் முன்பு போல் என்னை எழுதச் சொல்லிக் கேட்பித்தார். பதிலுரைக்காமல் சில காலம் பேசாமல் இருந்தேன். பின்னர் அவரே நேரடியாக என்னோடு பேசி எழுதும்படி கேட்டார். எனது முன்னைய அனுபவத்தைச் சொல்லி நான் தயங்க, சத்தியம் செய்யாத குறையாக எவரையும் இதில் தலையிட விடமாட்டேன். அதற்கு நானே பொறுப்பெனக் கூறி எழுதச் சொல்லி வலிந்து கேட்டார். அவரின் கோரிக்கையை மறுக்க முடியாமல் மீண்டும் எழுதத் தொடங்கினேன்.

மீண்டும் நான் எழுதத் தொடங்கிய தொடர் பரபரப்பாய் வாசிக்கப்பட்டது. ஏழெட்டுக் கட்டுரைகள் எழுதியிருப்பேன். மீண்டும் நிர்வாகப் பிரமுகர்களின் தலையீடு வந்தது. நான் என் உறவுகள் பற்றியும், என்னைப் பற்றியும் தான் எழுதுவதாகச் சொல்லி, எழுத்துப் பற்றி ஒன்றுமே தெரியாத அவர்கள் அழுத்தம் கொடுக்க, அவர்களை மறுக்க முடியாமல் ஸ்ரீகஜன் 'இந்தப் பத்தியில் இனி நீங்கள் இராமாயணம் பற்றி எழுதுங்களேன்' என்று அப்பாவித்தனமாய்க் கேட்டார். ஆத்திரப்பட்டு அம்முறையும் அத் தொடரை நிறுத்தினேன். இது எனது நான்காவது அனுபவம்.

இவ்வளவிற்கும் விளம்பரங்களினாலும், விற்பனையினாலும் இலட்சக்கணக்கில் பணம் சம்பாதிக்கும் இப்பத்திரிகைகள் என் எழுத்தாக்கங்களுக்கென ஒரு சதத்தைத்தானும் சன்மானமாய்த் தந்ததில்லை. அதுமட்டுமல்லாமல், என் ஆக்கங்கள் வெளிவந்த பத்திரிகைப் பிரதிகளைக்கூட எனக்கு அவர்கள் அனுப்பி வைத்ததில்லை.

தற்போது தமிழகத்தின் பல சஞ்சிகைகளுக்கு எழுதி வருகிறேன். ஆக்கங்கள் வெளியான அடுத்த வாரத்திலேயே அங்கிருந்து அச்சஞ்சிகைகளை எனக்குக் கிடைக்கச் செய்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் என்னுடைய ஒவ்வொரு கட்டுரைக்கும் ஐயாயிரம், ஆறாயிரம் என சன்மானத்தையும் தருகிறார்கள். நான் முன் சொன்ன 'பழம் பண்டிதரின் பகிரங்கக் கடிதங்கள்', 'அதிர்வுகள்' ஆகிய நூல்களைக் கூட நான் எனது பணத்தில் வெளியிடவில்லை. அந்தப் பதிப்பகத்தாரே அவற்றை வெளியிட்டு அவற்றிற்கான சன்மானங்களையும் ஒவ்வொரு பதிப்பின் போதும் எனக்கு அனுப்பி வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

எங்கள் நாட்டின் எழுத்துத்துறையும், எழுத்தாளர்களும் வளராததற்கான காரணம் இதுதான். பத்திரிகைகளும், சஞ்சிகைகளும் ஏதோ பிச்சை போடுவது போலத்தான், எழுத்தாளர்களுக்கு வாய்ப்பளிக்கிறார்கள். எழுத்தாளர்களும் தங்கள் பெயரோடு ஒரு ஆக்கம் வெளிவந்தால் போதுமென நினைந்து, அவர்கள் போடும் பிச்சையைத் தலையில் ஏந்தி வாங்கிக் கொள்கிறார்கள். 'மன்னவனும் நீயோ? வளநாடும் நின்னதுவோ?' என, புலமைச் செருக்குக் காட்டிய கம்பனைத் தொட்டு வாழும் எனக்கு இவர்களைப் போல் வாழப் பிடிக்காததால், இனி இங்கு எழுதுவதில்லை என்று முடிவெடுத்துச் சிலகாலம் மௌனித்திருந்தேன்.

இப்படியாய் சத்தியம் சார்ந்த எனது எழுத்துக்களை ஜீரணிக்க முடியாமல் பலரும் இடர்ப்பட்டும் இடர் செய்தும் நின்ற வேளையில், எனது நீண்டநாள் நண்பன் வித்தியாதரன் 'காலைக்கதிரை'த் தொடங்கிய போது, 'உங்களுக்கு முழுச்சுதந்திரம் தருகிறேன். தயவு செய்து மீண்டும் எழுதுங்கள்.' எனக் கேட்டுக் கொண்டான். (நீண்டநாள் நட்புறவு பற்றி அவனை ஒருமையிலேயே எழுத மனம் தூண்டுகிறது). ஆரம்பத்தில் தயங்கினாலும் வித்தியினது ஆளுமையில் எனக்கிருந்த நம்பிக்கையால்த்தான் இந்த 'பாட்டும் நானே! பாவமும் நானே!' என்ற பகுதியை எழுத ஆரம்பித்தேன்.

எனது நம்பிக்கை வீண் போகவில்லை. இன்றோடு இக்கேள்வி, பதில் பகுதி நூறு வாரத்தைத் தாண்டுகிறது. இப்போது இப்பகுதி சர்ச்சைகளுக்கு வித்திட்டு இங்கு மட்டுமல்லாமல், தமிழ்நாடு வரை பிரபலமாகத் தொடங்கியிருக்கிறது. இப் பகுதியில் சர்ச்சைக்குரிய பல பதில்களை எழுதினேன். அதனால், வித்தியாதரனுக்கும் பல இடையூறுகள் வந்திருக்கும். ஆனால் ஓர் உண்மைப் பத்திரிகை ஆசிரியரின் ஆளுமையோடு வித்தியாதரன் அவற்றைத் தனியே தாங்கிக் கொண்டான். அதுமட்டுமல்லாமல் என்மீதான எதிர்ப்புக்களுக்குக் கவசமாய் நின்று, என்னையும் காவல் செய்தான். அவனுடைய ஆளுமையாலும், துணிவாலும் தான் இப்பகுதி இன்று நூறாவது வாரத்தைத் தொடுகிறது. எனக்கும் என் எழுத்திற்கும் மதிப்பளித்த வித்திக்கு என் உணர்வுபூர்வமான நன்றி அறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நூறாவது வாரத்தோடு இக் கேள்விபதில் பகுதியை நிறுத்தலாம் என்று நினைக்கிறேன். ஆயிரந்தான் சுவையுடையதாயினும் 'அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சுதான்'. என் கருத்துக்களை வெளியிட இப்பகுதி உதவியது. இனித் தேவையேற்பட்டால் வேறு வடிவ வெளிப்பாட்டுடன் உங்களிடம் வருவேன்.

ஒவ்வொரு முறையும் இக் கேள்வி பதில் பகுதிக்கு, வேறு வேறு 'கோணங்கி' வடிவுகளில் என்னைப் படங்களாக்கி இப்பகுதியில் ஈர்ப்பேற்படச் செய்த என் அன்புக்குரிய சகோதரிகள் திருமதி த. நளாயினி, திருமதி கோ. சுதா அவர்களுக்கு எனதும், உங்களதும் நன்றிகள் உரித்தாகட்டும். இக் கேள்வி பதில்களை விமர்சித்து மதிப்பளித்த 'உலகநாதருக்கும்' என் உவப்பான வணக்கங்கள். யார் இந்த உலகநாதர்? என்று பலரும் கேட்கிறார்கள். அக்கேள்வி கடைசிவரை விடையற்ற கேள்வியாகவே இருக்கட்டும்.

இக்கேள்வி பதில் பகுதியைப் படித்து அவ்வப்போது கருத்துக்கள் வெளியிட்டு வந்த வாசகர்களுக்கும் எனது நன்றிகள். காலமும், கடவுளும் இடமளித்தால் ஏதோ வகையில் மீண்டும் உங்களைச் சந்திப்பேன்.

**'இன்பமே எந்நாளும் துன்பமில்லை'**

# கம்பவாரிதி தமது முடிவை மீள் பரிசீலனை செய்வார்!

## 'காலைக்கதிர்' மிக உறுதி

நண்பர் கம்பவாரிதி இலங்கை ஜெயராஜின் முடிவு நமக்கு மட்டுமல்ல, 'காலைக்கதிர்' அன்பு வாசகர்கள் ஒவ்வொருவருக்கும் பேரதிர்ச்சி. பெருங்கவலை.

இனி, சனிக்கிழமைகளில் காலையில் அந்தக் கேள்வி – பதில் பக்கத்தை ஓட்டிப் பாராட்டியும், திட்டியும், பேசியும் எனக்குத் தொலைபேசி அழைப்புகள் இல்லை என்பதை என்னால் ஜீரணிக்க முடியவில்லை.

உலகின் எந்த பாகத்தில் இருந்தாலும், வாரந்தோறும் நேரம் தவறாமல், கனகச்சிதமாகத் தன் பிரதியை அனுப்பி வைக்கும் ஒரே ஒரு எழுத்தாளர் அவரே என்பது நீண்ட பல தசாப்த கால என் ஆசிரியப் பணியின் அனுபவம்.

ஆளுமையின் சிகரமாய் நம் மத்தியில் விளங்கும் கம்பவாதியிடம் இந்தத் தொடர் பற்றி ஆரம்பத்தில் பேசியபோது விநயமாய் ஒரு விடயத்தைக் கூறி இருந்தேன்

"நீங்கள் உங்கள் சுதந்திரப்படி எழுதலாம். பதிலளிக்கலாம். யாரையும், எதையும் பாராட்டலாம். விமர்சிக்கலாம். என்னையும் எங்கள் பத்திரிகையையும் கூட நார் நாராகக் கிழித்துத் தொங்கவிடலாம். ஓர் எழுத்து மாற்றப்படாமல் பிரசுரிப்போம். அதன் மூலம் நம்மை நாமே பெருமைப்படுத்துவோம். சட்டச் சிக்கல்களை மட்டும் கவனித்துக் கொள்ளுங்கள்" – என்றேன் நான்.

அவர் எழுத்தால் ஆங்காங்கே சில முணுமுணுப்புக்கள், ஆட்சேபங்கள் வந்திருக்கலாம். ஆனால் அவை எவையும் பொருட்டல்ல. அவை எல்லாவற்றையும் தாண்டி, 'காலைக்கதிர்' இதழுக்கு பல்லாயிரம் அன்பு வாசகர்களை அவரின் அற்புதமான, ஆளுமையான, தனித்துவமான, அறிவாற்றல் மிக்க எழுத்து எங்களுக்கு திரட்டி தந்தது என்பதுதான் நிஜம்.

அது மட்டுமல்ல 'காலைக்கதிர்' என்ற ஜீவன் உள்ள பத்திரிகையை கம்பவாரிதி போன்றோர் தாங்கி நிற்கின்றனர் என்ற உண்மை வெளிப்படுத்தப்பட்டமை மூலம் காலைக்கதிரின் இயக்கத்துக்கு ஒரு சத்தியமும் நேர்மைச்சான்று கிடைத்தமையை நான் மதிப்புக்குரிய பேறாகக் கருதுகிறேன். அவர் பங்களித்து, ஆசீர்வதித்து நிற்கும் ஒரு பத்திரிகையை, அந்த நேர்மைத் திறத்துடன் நடத்த வேண்டும் என்ற ஆத்மார்த்தமான உணர்வை அவர் பங்களிப்பும் எழுத்தும் நமக்கு தந்து நிற்கின்றன.

இன்றைய காலச் சூழலில் அரசியலிலும் பக்கம் சாராத – நீதி நெறி உரைக்கின்ற – அவரின் வழிப்படுத்தல் – நெறிப்படுத்தல் – நமது தமிழ் சமூகத்துக்கு அவசியமானது; அத்தியாவசியமானது.

'காலைக்கதிர்' தடம் மாறினால் கூட அதற்கு கடிவாளமிட, அவரின் எழுதுகோல் சாட்டையாக மாற வேண்டிய தேவை உள்ளது. அவரைப் பொறுத்தவரை அவர் போன்ற 'முதிர்ந்த பழங்களின்' சமூக கடப்பாடு – கடமை – என்று அதை கருதி அவருக்கு நினைவூட்ட விரும்புகிறேன். அதற்காக அவரின் இப்பணி தொடர வேண்டும்.

அவருக்காகக் காலைக்கதிர் பக்கங்கள் காத்திருக்கின்றன. எந்த வடிவத்திலாவது தமிழ் மக்களுடன் அவர் ஊடாட்டம் கொள்ள, காலைக்கதிர் இடையில் ஊடகமாக விரும்புகிறான் – அன்புரிமையுடன்.

என்னைக் கேட்டால், மக்களை நெருங்கித் தொட, ஒவ்வொரு வாரமும் பல விடயங்களை தொட்டுக் கையாள, கேள்வி – பதிலே நல்ல வடிவம் என்பேன்.

அவர் காலச் சூழல் அறிந்தவர். அறிஞர். ஆவன செய்வார். சமூக கடமையையும் சரிவரத் தொடர்வார்.

அவர் பேச்சுக்கு மட்டுமல்ல, எழுத்துக்கும் என்றும் தலை வணங்குகிறோம்.

**நன்றி,**
**ஆசிரியர்.**

**பிற்குறிப்பு:**

இன்றும் கூட என் ஆசிரியர் பீட உதவியாளர் ஒருவர் ஒரு விடயத்தைச் சுட்டினார். கம்பவாரிதி தம் கடிதத்தில் பல சகோதர பத்திரிகையாளர்களை 'போட்டுப் பிடித்திருக்கிறார்'. அவற்றைப் பிரசுரத்திற்காக அனுமதிக்கலாமா என்று கேட்டார்.

கம்பவாரிதி குறிப்பிடும் விடயங்கள் உண்மையானால் அவை பிரசுரிக்கப்படுவதில் தப்பில்லை. ஏன், கட்டாயம் பிரசிக்கப்படவும் வேண்டும். பத்திரிகையாளர்கள் எவரேனும் அவரின் கருத்துரையை மறுக்க முயன்றால் அதற்கும் இடம் அளிப்போம். அவரின் கருத்துரையில் சட்டப் பிரச்சினை, தவறுகள் இல்லை. நியாயப் பிரச்சினை வந்தால் எதிர்கொள்வோம். கம்பவாரிதி இங்கு குறிப்பிட்ட பத்திரிகையாளர்கள் எல்லோருமே பெரும்பாலும் எனது நண்பர்கள். மிகவும் பரிச்சயமானவர்கள்.நெருக்கமானவர்கள்.

ஆனால் அதற்காக கம்பவாரிதியின் பத்தி எழுதுவதற்கு நாம் அவருக்கு அழைப்பு விடுத்து வரவேற்றபோது கொடுத்த வாக்குறுதியிலிருந்து மீற முடியாது. வருவதைப் பார்ப்போம். – என்றேன் என் உதவியாளரிடம்.

அவரின் எழுத்தில் சத்தியம் இருக்கிறது; நேர்மை இருக்கிறது; உண்மை இருக்கிறது; உயர்வு இருக்கிறது. அவற்றுக்கு இடம் அளிக்கக் 'காலைக்கதிர்' தொடர்ந்தும் காத்திருக்கிறது. (ஆ – ர்)

காலைக்கதிர் Kalaikkathir

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## வாழ்வின் அம்சங்கள் – கௌதம புத்தர்



- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம் - 214

தமிழ் மக்கள் பேசும் சுய நிர்ணயம் எதைக்கோருகிறது என்பது சர்வதேசத்தில் பலருக்கு குழப்பங்களைத்தந்து சலிப்பையும் தருகிறது.

ஒரு பகுதி, சுயநிர்ணய அடிப்படையில் தனி நாடு, தமிழீழம் என்கிறது. இன்னும் ஒன்று, தமிழ் தேசம் (தமிழ் தேசம் என்று குறிக்கும் போது அது பொதுவாக விளங்கிக்கொள்ளும்நாட்டை அடையாளப்படுத்துகின்றதா என்று தெளிவில்லை) என்கின்றது. வேறு பகுதிகள் சமஷ்டி (அவையும் பல உட்பிரிவுகள்) அல்லது அதில் உச்ச அதிகாரப் பகிர்வு என்கிறார்கள். சர்வதேச சட்டத்தின் இந்த வார்த்தை தமிழ் மக்களுக்கு சாதகமானது, சர்வதேசத்தினால் அமுல்படுத்தப்படுமானால் அது எதையோ அடைந்து கொள்ள அவர்களுக்கு சந்தர்ப்பம் கிடைக்கும். அதுவரை ஒவ்வொரு பகுதியிலும் இது அரசியல் தான்.

இந்த அரசியலுக்கு மறுப்பாக சிங்கள மக்கள் பௌத்த மத வாதத்தை தொடங்கி, அதனை யதார்த்தமாகப் பெரும்பான்மைச் சிங்களவரிடையே வளர்த்து, தங்களது அதிகாரங்கள் ஊடாக அது நாடு முழுவதிலும் செழித்திருக்கிறது என்ற வாதத்திற்கு பூமாலைகளும் தேடி வைத்துள்ளார்கள். ஆகவே தமிழ் மக்களின் பிரதேசம் என்ற ஒன்று இருந்தத்சியோ, அவர்களது மதமோ, கலாச்சாரங்களோ பெரும்பான்மையாக அங்கு இருந்தன என்பதையோ 'தனித்துவங்களாக' ஏற்றுக்கொள்ள சிங்களம் தயாராகவில்லை.

பௌத்தத்தை பாதுகாத்து, கௌரவம் தேடும் இந்த மக்களுக்கு மட்டுமல்ல, உலகில் யாவருக்குமே புனிதர் கௌதம புத்தர் கூறியது "முடிவில் வாழ்க்கையில் மூன்று அம்சங்கள் முக்கியமாகின்றன. ஒன்று – நீ எவ்வளவு அன்பு செலுத்தியவனாக இருந்தாய், இரண்டு – நீ எவ்வளவு மென்மையுடன் (வன்முறையற்று) வாழ்ந்தாய் என்பது, மூன்றாவது – நீ எவ்வளவு பெருந்தன்மையுடன் உனக்கு முக்கியமானது என நீ கருத்தியவற்றை விட்டுக் கொடுத்தாய் என்பது" ஆகியவையே.

ஆக, பிடித்த இறைச்சி துண்டை விட்டுக் கொடுப்பதே இல்லை என்றால் இந்த பௌத்தர்களோடு இணக்கத்தில் அடிப்படை எவ்வாறு உருவாகும்? இல்லாவிடில் இரு பகுதியினரதும், முக்கியமாக தமிழ் மக்களுக்கான யதார்த்த நிலை என்ன? புலம்பெயரின் பகுதிகளின் முன்னெடுப்புகளில்தமிழீழம்உருவாகக்கூடிய சாத்தியக்கூறுகள் தெரிகின்றனவா? உண்டா,அன்றில்அதன்உணர்ச்சிகளில் மக்களை வாழ (சாக) வைக்கக் கேட்கிறோமா? சுயநிர்ணய உரிமைக்கான சர்வதேச சட்டங்கள் இருந்தாலும் அவற்றை தமிழ் மக்களுக்குச் சாதகமாக அமல்படுத்தக்கூடிய இந்தியாவை மேவிய யதார்த்தமான புவியியல் அரசியல் சாத்திய கூறுகள் அமைகின்றனவா? தமிழ் மக்கள் தங்களுடைய நாட்டிலும் புலம்பெயரிலும் தங்களது இருப்பைத் தக்கவைத்துக் கொள்ள நடத்தும் உரிமைப் போராட்டங்கள் தங்களது ஆளுமைகளையோ அன்றில் அதிகாரங்களை நிகழ்த்த நடத்தப்படுபவையா?

எனது எழுத்தாக்கத்தின் தராதரத்தில் குறிக்க விரும்பிய அந்த எண்ண ஓட்டங்களை சீரான விளக்கம் தந்த விதத்தில் பதிந்திருந்தேனா என்ற ஆதங்கம் எனக்கு இருந்தது. 16 – 12/22 காலையில் காலைக்கதிரில் சம நேரத்தில் என்.சத்தியமூர்த்தி 'இது தேவையா?' என்ற அலசலில் தொகுத்திருந்தவையைப் படித்த போது அவரது பாணியில் அவர் முக்கியமான செய்திகளை எனது பிரதிபலிப்பை ஒத்துத் தெரிவிக்கிறார் என மகிழ்ச்சி அடைந்தேன்

'பல்பொடி விளம்பரமா?' எனக் கேட்டு –

"பேச்சுவார்த்தை துவங்குவதற்கு முன்பே, அதனை இந்தியா மேற்பார்வையிட வேண்டும் என்று நீதியரசர் விக்னேஸ்வரன் கோரினார். அவர் வட மாகாணத்தில் கூட்டமைப்பின் முதலமைச்சராக இருந்த காலகட்டத்தில் அவரது தனிப்பட்ட டெல்லி விஜயத்தின் போது, இந்திய அரசுத் தலைவர்களைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்துவதை தவிர்த்தார். தயக்கம் காட்டினார்.

"விக்னேஸ்வரனைத் தொடர்ந்து ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதனும் இந்தியாவை உள்ளே இழுக்க முயற்சி செய்தார். அவரும் அவரது பேச்சாளர் சுரேந்திரனும், இந்தியாவோடு நிற்காமல், பிரித்தானியா, அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளையும் கூட சேர்த்துக்கொண்டார்கள். முன்பெல்லாம், தமிழ் நாட்டில் கோபால் பல்பொடி விளம்பரத்தை போல. அந்த விளம்பரத்தில் தான், இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் என்று எல்லா நாடுகளிலும் புகழ் பெற்றது என்று அனேக நாடுகளின் பெயர்கள் சேர்க்கப்பட்டிருக்கும்.

"ஆனால், செவ்வாய்கிழமை கூட்டத்தில் இந்தியாவின் பங்களிப்பு குறித்து யாருமே வாய் திறக்கவில்லை என்று செய்திகள் தெரிவிக்கின்றன. சரியான முடிவு. இந்தியாவின் முடிவு தெரியாமல், தாமாகவே வாய்க்கு வந்தபடி பேசி, அரச தரப்பிடமிருந்து வாங்கிகட்டிக் கொள்ள யாருமே தயாராயில்லை என்று புரிகிறது."
– என்று குறிப்பிட்டார்.

மேலும் –

"இது ஒரு புறமிருக்க, இந்தியா தலைமையில் ஒரு மேற்பார்வை குழு அமைக்க மேலை நாடுகள் ஒத்துக்கொள்ளுமா என்பதைக் கூட அவர்கள் யோசித்தனர் எனத் தெரியவில்லை.... மாறாக, இலங்கைப் பிரச்சினையில் அந்த மூன்று மேற்குலக நாடுகளின் நிலைமை வேறு. இந்தியாவின் நிலைமை வேறு.....

இலங்கை விடயத்தில் இந்தியா ஒரு சூடு பட்ட பூனை.பிள்ளையார் பிடிக்க போய் குரங்காக முடிந்த கதை.... ஆனால் வழக்கம் போலவே தமிழ் தலைவர்கள் தும்பை விட்டு வாலைப் பிடிக்கும் விளையாட்டில் இறங்கி இருக்கிறார்கள். இது யாரை ஏமாற்ற? அதுவும் தென்னிலங்கை அரசியல் கட்சிகள் மற்றும் சமூகத்தைப் பொறுத்தவரையில் அவர்கள் ஆகக் கொடுப்பதற்கு தயாராக இருப்பது என்னவென்று தமிழ் தரப்புக்கு நன்றாக தெரியும்." – என்று பதிவிட்டிருந்தார். அவற்றுக்காக சிங்கள தரப்புகள் முன் வைப்பவற்றை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற கருத்தாக்கத்தை முன்வைக்கவில்லை; புலம்பெயர் சமூகமும் நாட்டின் தலைமைகளும் மையப் புள்ளியில் சந்தித்து சாத்தியமானவற்றை நடைமுறைப்படுத்த ஒத்துக்கொள்ள வேண்டிய முன்னெடுப்புகள் செய்ய வேண்டும் என்ற பார்வையை மேலோங்கியது

### காடும் கடலும்

புலம்பெயர் தமிழ் மக்கள் தங்களுடைய நடத்தும் வாரிசுப் போட்டிகள் (அதாவது பிரபாகரனின் உயிலுக்கு யார் வாரிசு என்பது) தமிழ் மக்களின் எதிர் காலத்து இருப்பை முன்னிட்டு நடக்கின்றனவா அல்லது தங்களது ஆளுமைகளுக்கோ அன்றில் அதிகாரத்தை நிலை நிறுத்தவா என்ற கேள்விகள் மின்னஞ்சல்களிலும் ஊடகங்களிலும் குறுந்தட்டு செய்க்களிலும் உலாவுவத்தை பார்க்கும் போது எழும்.

சர்வதேசங்களுடைய நடத்தப்பட வேண்டிய பிரச்சார அழுத்தங்கள் என்பவை எப்படியாக அமைய வேண்டும் எனவும், நம்பகத்தைதரக்கூடியதான நிகழ்வை அடங்காத் தமிழன் சுந்தரலிங்கத்தின் பேர்த்தியார் ஆனந்தவல்லியின் மகன் சசிதரன் (சக்தி ) எழுதி தாயாருடைய பங்களிப்போடு மேடையேற்றிய காடும் கடலும் Jungle and the sea)என்ற நாடகத்தை பார்வையிட்ட போது ஏற்பட்டது. அவை பற்றிய விவரங்களை தொடர்ந்து பார்ப்போம்.

(வளரும்.....)



காலைக்கதிர் Kalaikkathir

# இது தேவையா?

## அக்கரை இக்கறை அலசல்



என்.சத்தியமூர்த்தி



எதிர்பார்த்தபடியே, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைப்பில், இனப்பிரச்சினைத் தீர்வு குறித்து பேசுவதற்கான அனைத்துகட்சிகளின்முதல்நல்லெண்ண கூட்டம் பிரச்சினைகள் எதுவுமின்றி முடிவடைந்துள்ளது. இன்னும் சொல்லப் போனால், தமிழர்களுக்கான தீர்வு திட்டம் குறித்து பிரச்சினை எழுப்புவர் என்று கருதப்பட்ட விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில்ல மற்றும் ஜே.வி.பி. தரப்பினர் ஆகியோர், பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளவில்லை.

இது ஒரு வகையில் வரவேற்கப்பட வேண்டியது. என்றாலும். பிற்காலத்தில், அதிகார பகிர்வு மற்றும் சமஷ்டி தீர்வு போன்ற விடயங்கள் குறித்து அனைத்து கட்சியினர் விவாதிக்கும் போது, இந்த கட்சியினர் அதனை புறக்கணிப்பார்கள் என்ற கூற முடியாது. அவ்வாறு புறக்கணித்தாலும், பின்னர் அதனை எதிர்த்து போராட மாட்டார்கள் என்றும் உறுதி கூற முடியாது. அதற்கு பழைய கால அனுபவங்கள் அத்தாட்சி.

செவ்வாய்கிழமை நடைபெற்ற கூட்டத்தில், அதிகார பகிர்வு குறித்து பேசவே இல்லை. மாறாக, பேச்சுக்கான பேச்சு என்ற விதத்தில், காணாமல் ஆக்கப்பட்டோர், காணி அபகரிப்பு மற்றும் சுவீகாரம், அதற்கும் அப்பால், அரசியல் கைதிகள் ஆகிய பிரச்சினைகள் குறித்து மட்டுமே பேசப்பட்டது. இதில், ரணில் அரசு இணக்கமாக நடந்து கொள்ளும் என்று எதிர்பார்க்க இடமிருக்கிறது.

அரசியல் கைதிகள் விகவாரத்தில், சிறையில் இருக்கும் முப்பதுக்கு மேற்பட்டோர், குறிப்பிட்ட குற்றங்களுக்காக சிறையில் இருப்பவர்கள் என்றும், அவர்கள் தரப்பில் அரசு மறுபரிசீலனை செய்ய இடமில்லை என்ற வகையிலும் அரசு தரப்பு முன்னரே கூறிவிட்டது. அது குறித்து, இனி தமிழ் அரசியல் தரப்பு அடக்கியே வாசிக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

வெளிவந்துள்ள செய்திகளின் படி, காணாமல் ஆக்கப்பட்டோரை அரசு தரப்பு கொன்று விட்டது என்று சம்பந்தன் அந்த கூட்டத்தில் எடுத்துரைத்தார். அதற்கான பொறுப்புகூறலில் இருந்து அரசு தப்ப முடியாது என்றும் அவர் கூறினார் எனச் செய்திகள் கூறுகின்றன.

அங்கு தான் பிரச்சினையே. பொறுப்பு கூறல் விடயத்தில் அரசின் வழிமுறை ஒன்று, சர்வதேசத்தின் எதிர்பார்ப்பு பிறிதொன்று. தற்போதைய மாறுபட்ட அரசியல் சூழலில், தமிழர் தரப்பு எதனை எதிர்பார்க்கிறது. அரசு ஒட்டுமொத்தமாக தமிழ் சமூகத்திடம் மன்னிப்பு கேட்கவேண்டுமா, அல்லது, அதற்கு அப்பாலும் செல்ல வேண்டுமா?

காணி அபகரிப்பு மற்றும் சுவீகரிப்பு விடயத்தில், தமிழர் தரப்பு கூறுவதில் நியாயம் இருக்கிறது. அதனை முடித்து வைக்கும் பொறுப்பும் அதற்கான அதிகாரமும் ஜனாதிபதியிடம் இருக்கிறது. அதற்காக, மட்டும் ஒரு சர்வகட்சி கூட்டம் தேவையில்லை.

### பல்பொடி விளம்பரம்?

பேச்சுவார்த்தை துவங்குவதற்கு முன்பே, அதனை இந்தியா மேற்பார்வையிட வேண்டும் என்று நீதியரசர் விக்னேஸ்வரன் கோரினார். அவர் வட மாகாணத்தில் கூட்டமைப்பின் முதலமைச்சராக இருந்த காலகட்டத்தில் அவரது தனிப்பட்ட டெல்லி விஜயத்தின் போது, இந்திய அரசுத் தலைவர்களைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்துவதை தவிர்த்தார். தயக்கம் காட்டினார்.

விக்னேஸ்வரனைத் தொடர்ந்து ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதனும் இந்தியாவை உள்ளே இழுக்க முயற்சி செய்தார். அவரும் அவரது பேச்சாளர் சுரேந்திரனும், இந்தியாவோடு நிற்காமல், பிரித்தானியா, அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளையும் கூட சேர்த்துக்கொண்டார்கள். முன்பெல்லாம், தமிழ் நாட்டில் கோபால் பல்பொடி விளம்பரத்தை போல. அந்த விளம்பரத்தில்தான், இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் என்று எல்லா நாடுகளிலும் புகழ் பெற்றது என்று அனேக நாடுகளின் பெயர்கள் சேர்க்கப்பட்டிருக்கும்.

ஆனால், செவ்வாய்கிழமை கூட்டத்தில் இந்தியாவின் பங்களிப்பு குறித்து யாருமே வாய் திறக்கவில்லை என்று செய்திகள் தெரிவிக்கின்றன. சரியான முடிவு. இந்தியாவின் முடிவு தெரியாமல், தாமாகவே வாய்க்கு வந்தபடி பேசி, அரச தரப்பிடமிருந்து வாங்கிகட்டிக் கொள்ள யாருமே தயாராயில்லை என்று புரிகிறது.

### பிறநாட்டு தலையீடு

இது ஒரு புறமிருக்க, இந்தியா தலைமையில் ஒரு மேற்பார்வை குழு அமைக்க மேலை நாடுகள் ஒத்துக்கொள்ளுமா என்பதைக் கூட அவர்கள் யோசித்தனர் எனத் தெரியவில்லை. இதில் நாடுகளில் பெரியவன் – சிறியவன் என்ற பாகுபாட்டிற்கு இடமில்லை. மாறாக, இலங்கைப் பிரச்சினையில் அந்த மூன்று மேற்குலக நாடுகளின் நிலைமை வேறு, இந்தியாவின் நிலைமை வேறு.

குறிப்பாக, மனித உரிமைகள் விடயத்திலும், அது சார்ந்த சர்வதேச போர் குற்றங்கள் விசாரணையிலும், இந்தியாவின் நிலைமை தெளிவாக்கப்பட்டுள்ளது. இது விடயத்தில் பிற நாட்டு தலையீட்டை இந்தியா ஆதரிப்பதில்லை.

தற்போது, தமிழ் கட்சிகள் போர் குற்றங்கள் குறித்து பேசவில்லை என்றாலும், முந்தைய அனுபவத்தை வைத்து பார்க்கும் போது, அடுத்தடுத்த கட்டங்களில் அது குறித்து அவர்களில் ஒரு சிலராவது பேச துவங்குவார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

இது விடயத்தில், அனைத்து கட்சி கூட்டத்தில், சம்ப்ந்தன் சாமர்த்தியமாக பேசி, பொருள் தலைப்பையே மாற்றிவிட்டார். அதாவது, காணாமல் போனோரை அரசு கொன்றுவிட்டது என்று கூறி, உண்மை அறியும் விசாரணை தேவையில்லை என்றளவில பேசியுள்ளார். வரவேற்கத்தக்கது. ஆனால், அதனை புலம்பெயர்ந்தோர் அமைப்புகள் அனைத்துமே ஆதரிக்குமா, அல்லது அவர்களது உள்ளூர் ஊதுகுழல்கள்வாய்மூடிஇருக்குமா,என்பவற்றை பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

இது தவிர, தமிழர் தரப்பின் சமஷ்டி தீர்வு குறித்தும் அவர்களிடையே கூட பல்வேறு நிலை கருத்துகள் நிலவுகின்றன. சமஷ்டி, அதிகார பகிர்வு, உச்சபட்ச அதிகார பகிர்வு, அதி உச்சபட்ச அதிகார பகிர்வு என்று பல்வேறு வசனங்கள் சுற்றிசுற்றி வருகின்றன. அவை குறித்து, அவர்களில் யாருக்குமே தெளிவில்லை. அனைவருக்கும் ஒரே கருத்து உள்ளதா, என்பதும் தெரியவில்லை.

இதில், அதி உச்சபட்ச அதிகார பகிர்வு என்பது அமெரிக்காவில் தற்போது வழமையில் உள்ள சமஷ்டி திட்டத்தின் அடிப்படையில் வைக்கப்படும் கோரிக்கை என்றே தோன்றுகிறது. அத்தகைய கோரிக்கையை இந்தியா ஆதரிக்குமா, என்று தெரியவில்லை. புலம்பெயர்ந்த தமிழர்களின் வாக்குவங்கிக்கு அப்பால் சென்று, பிரித்தானிய அரசியல்வாதிகளுக்கு அப்பால், அங்குள்ள அரசு இயந்திரமும் அத்தகைய கோரிக்கைக்கு முழு அளவிலான ஆதரவை வழங்குமா, என்பது கூட கேள்விகுறியே!

### சுடுபட்ட பூனை

இலங்கை விடயத்தில், இந்தியா, ஒரு சூடுபட்ட பூனை. பிள்ளையார் பிடிக்கப் போய் குரங்காக முடிந்த கதை. தமிழர் தரப்பிற்காக களம் இறங்கி, தமிழ் இளைஞர் குழுக்களுக்கு ஆதரவாக ஆயுதம் மற்றும் ஆயுத பயிற்சி அளித்த இந்தியா, அதே சமயம், தமிழ் மிதவாத தலைமைகளைக் கைவிட்டுவிடவில்லை.

இன்னும்சொல்லப்போனால், நோர்வே துவங்கிய மேற்குலக நாடுகள் பிற்காலத்தில் கூறிய 'லெவல் –பிளேயிங் பீல்ட்' என்ற கருத்திற்கு முன்னோடியாக அமைந்ததே இந்தியாவின் இந்த முயற்சி தான். அதாவது, மிதவாத அரசியல் தலைமைகளின் கரங்களை வலுப்படுத்த மட்டுமே, இந்தியா ஆயுதக் குழுக்களை ஊக்குவித்தது. பிரபாகரன் என்ற தனி மனிதன் தமிழ் மக்களின் சர்வாதிகாரியாக மாறுவதற்காகல்ல.

ஆனால், அன்றைய ஜெயவர்தனே அரசு, அமிர்தலிங்கம் – சிவசிதம்பரம் தலைமையிலான மிதவாத தமிழ் தரப்புடன் பேச்சுவார்த்தை துவங்கிய பின்னரும், போராளி குழக்கள், குறிப்பாக விடுதலை புலிகள் இயக்கம் அடக்கி வாசிக்காமல் போனது, தமிழ் சமூகத்தின் துரதிர்ஷ்டமே. காரணம், அமிர்தலிங்கம் போன்ற தமிழ் தலைவர்களையே பதம் பார்த்த விடுதலை புலிகள இயக்கம், தன்னை கூர் செய்த இந்தியாவையும் விட்டு வைக்கவில்லை. ராஜீவ் காந்தி படுகொலையை கூட ஒரு துன்பியல் சம்பவம் என்றளவிற்கு பின் தள்ளிவிட்டனர்.

இதற்கு பின்னரும், இந்தியா, இவர்கள் சொல் கேட்டு ஆடுவார்கள் என்று யாராவது நினைத்தால், அது அவர்களது அறிவீனத்தையே குறிக்கும். அல்லது, அவர்கள் இன்னமும் கிணற்று தவளைகளாகவே வாழ்கிறார்கள், அல்லது, குண்டு சட்டிக்குள் குதிரை ஓட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்றே முடிவு செய்ய வேண்டும்.

### யார் கண்ணை குத்துவது?

அந்த வகையில், செல்வம் வகையாறா முன்னெடுத்த இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கான அனைத்து தமிழ் கட்சிகளின் கடிதமும் கூட, தமிழ் தலைமைகளின் இரு முகங்களையே மீண்டும் உலகிற்கு காட்டியது. அல்லது, அவர்களுடையது, 'பன்முக தன்மை' எனலாம். அந்த கடிதத்தை அவர்களே மறந்துவிட்டார்கள்.

ஒருபுறம், இந்தியாவின் வழிகாட்டுதலின் பேரில் இனப்பிரச்சினைக்கு முடிவு காண முயற்சிப்போம் என்று பாசாங்கு. மறுபுறம், சர்வதேசம் மூலமாக, ஜெனிவா, ஐக்கிய நாடுகள் மனித உரிமை அமைப்பிடம் மன்றாடுவோம், என்ற செயல்பாடு. இது தான், தமிழ் தலைமைகளின் சித்து விளையாட்டு.

இதில் யார் கையை வைத்து, யார் கண்ணை, அவர்கள் குத்தப் பார்க்கிறார்கள்? உண்மையில், தமிழர் அரசியல் தலைமைகள் திரும்ப, திரும்ப குத்திக் கொண்டிருப்பது, தமிழ் சமூகத்தின் குருடாக்கப்பட்ட கண்களை தான். அதுவும் அவர்களது விரல்களாலேயே.

### மானம், மரியாதை

இந்தியாவை பொறுத்தமட்டில், ஒன்றுபட்ட இலங்கையில், தமிழ் சமூகம் மானத்துடனும், மரியாதையுடனும், பாதுகாப்பாக, உரிய அரசியல் அதிகாரங்களுடனும் வாழ வேண்டும் என்று நினைத்தன் காரணமாகவே, கடந்த எண்பதுகள் துவக்கம் முயற்சிகளை முன்னெடுத்தது. அதே நிலைமை இன்றும் தொடருகிறது. எனவே தான், மாறி – மாறி பேசும் தமிழ் அரசியல் தலைமைகளிடம் சிக்கிக் கொள்வதற்கு மோடி அரசு தயக்கம் காட்டுகிறது, என்றே எண்ண தோன்றுகிறது.

அந்த வகையில், அன்றைய ராஜீவ் காந்தி தலைமையிலான காங்கிரஸ் அரசு முன்மொழிந்த பதிமூன்றாவது சட்டதிருத்தத்தை தற்போதைய, பாரதீய ஜனதா தலைமையிலான மோடி அரசும் ஆதரிக்கிறது. இடைப்பட்ட காலத்தில் இந்தியாவில் அமைந்த அனைத்து அரசுகளும் அந்த நிலைபாட்டிலேயே தொடர்ந்து வந்திருக்கின்றன. இதிலிருந்தே, இலங்கை தமிழ் தலைமைகளுக்கு, இந்தியாவின் நிலைப்பாடு குறித்து தெளிவான எண்ணம் தோன்றியிருக்கவேண்டும்.

### தும்பை விட்டு, வாலை பிடி

ஆனால், வழக்கம் போலவே, தமிழ் தலைமைகள் தும்பை விட்டு, வாலை பிடிக்கும் விளையாட்டில் இறங்கியிருக்கிறார்கள். இது யாரை ஏமாற்ற? இலங்கை அரசை பொறுத்தவரையில், அதுவும் தென்னிலங்கை அரசியல் கட்சிகள் மற்றும் சமூகத்தை பொறுத்த வரையில், அவர்கள், ஆக கொடுப்பதற்கு தயாராக இருப்பது எனனவென்று, தமிழர் தரப்பிற்கு நன்றாகவே தெரியும்.

அதனால்தானோ என்னவோ, அதனை விட உயரமான ஓர் இலக்கை நிர்ணயித்து, சமஷ்டி என்றெல்லாம் கோரிக்கை வைக்கிறார்கள். அரசியல் தீர்வு குறித்த பேச்சுவார்த்தை என்பது, உயரம் தாண்டுதல் அல்லது நீளம் தாண்டுதலுக்கான பயிற்சியா, என்ன – அடுத்தடுத்து, இலக்கை உயர்த்திக்கொண்டே போவதற்கு?

உண்மை நிலை என்னவென்றால், தற்போதைய இலங்கை அரசியல் – பொருளாதார நிலையில், இந்தியாவின் அனுசரணையோடு பெறப்பட்ட பதிமூன்றாவது சட்டத்தின் கீழான அதிகார பகிர்வுகளை தமிழர் தரப்பு பெற்றுக்கொண்டலே, எவ்வளவோ சாதிக்கலாம். அன்று, அந்தச் சட்டம் செயல்பாட்டிற்கு வந்தபோது, தமிழர் தரப்பு உாராக இருந்திருந்தால், தங்களது இறைமையை, விடுதலை புலிகள் இயக்கத்திற்கு தாரைவார்க்காது தொடர்ந்திருந்தால், தற்போது அவர்களின் நிலைமை விண்ணைத் தொட்டிருக்கும்.

மாறாக, பிரபாகரன் சொல் பேச்சு கேட்டு நடந்ததால், அவர்களில் பலரும் விண்ணை தொட்டார்கள். அவ்வளவு தான் வித்தியாசம். நினைக்க, நினைக்க, வயிற்றெரிச்கலே மிஞ்சுகிறது.

இது, இந்தியாவிற்கு, தேவையா, என்ன?

## பௌத்த, பாலி ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிவித்தல் வரை பல்கலைக்கழகத்தை மூட முடிவு செய்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஹோமாகம பிடிபன பௌத்த மற்றும் பாலி பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற பகிடிவதை சம்பவம் தொடர்பில் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் செயலாளர் தலாவே தம்மிக்க தேரர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட தலாவே தம்மிக்க தேரர் ஹோமாகம நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதன் பின்னர் எதிர்வரும் 27ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹோமாகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## ஒரே குடும்பத்தில் 3 .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்கு இதுவரை சட்டப்படி திருமணம் செய்து கொள்ளாத 19 குடும்பங்களின் திருமண பதிவு செய்யப்பட்டுள்ளது.

சட்டப்படி திருமணம் செய்து கொள்ளாததால் அந்த குடும்பங்களில் பிறக்கும் குழந்தைகளுக்கு பிறப்பு சான்றிதழ் வழங்குவதில் உள்ள சிக்கல்களை குறைக்கவும், பணியாளர் நல நிதி பெறுவதில் உள்ள சிக்கல்களை குறைக்கவும் இந்த திருமணம் நடத்தப்பட்டது.

இதன்போது நடைபெற்ற திருமணங்களுக்கான சாட்சிகளுக்காக கண்டி மாவட்ட செயலாளரும் யட்டிநுவர பிரதேச செயலாளரும் கையொப்பமிட்டுள்ளனர்.

## புலமைப் பரிசில் பரீட்சை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில், சகல பரீட்சை மண்டபங்கள், ஒருங்கிணைப்பு மத்திய நிலையங்கள் உள்ளிட்டவற்றுக்கு தேவையான ஆவணங்கள், கடிதங்கள் அனைத்தும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இம்முறை பரீட்சையில் குறிப்பிட்டுக் கூறக் கூடிய விடயம் பகுதி இரண்டு வினாத்தாள் முதலில் வழங்கப்படும் என்பதாகும். மேலும் கடந்த பரீட்சையின் போது நேரம் தொடர்பில் பரீட்சை திணைக்களத்திற்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன. எனவே இம்முறை பரீட்சை மண்டப பொறுப்பதிகாரிகள் இவ்விடயம் தொடர்பில் அவதானத்துடன் செயற்படுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

அத்தோடு இம்முறை பரீட்சைக்கான அனுமதி அட்டை வழங்கப்பட மாட்டாது. அனுமதி அட்டையில் மாணவர்களிடம் கையெழுத்து பெறும் நேரத்தை மீதப்படுத்துவதற்கான இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இதற்கு பதிலாக பரீட்சை ஆரம்பமாவதற்கு முன்னர் வருகை பதிவு ஆவணமொன்றில் கையெழுத்து பெறப்படும் என்றார்.

## கோட்டாவின் ஊடகச் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்படுத்தியமை, பொலிஸாரின் கட்டளையை மீறி வாகனம் செலுத்திச் சென்றமை தொடர்பில் அவர் இவ்வாறு கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸ் தகவல்கள் தெரிவித்தன.

நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் வெளிநாட்டு தூதுக் குழு கட்டுகஸ்தோட்டை பாலத்தை அண்மித்த பகுதியில் பயணிக்கும் போது இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும், பாதுகாப்புக்கு சென்ற அதிகாரிகளின் தகவல்கள் பிரகாரம் சுதேவவைக் கைது செய்தனர் எனவும் பொலிஸ் தகவல்கள் தெரிவித்தன. சுதேவவை கைது செய்யும் போது அவருடன் பிரபல பாடகர் ஒருவரும் இருந்தார் எனக் கூறப்படுகின்றது.

எவ்வாறாயினும் கைது செய்யப்பட்ட சுதேவ மீது குடி போதையில் வாகனம் செலுத்தியமை குறித்து மட்டும் குற்றச்சாட்டு முன்வைத்து அவரை பொலிஸ் பிணையில் விடுவிக்க பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். அதன்படி எதிர்வரும் 23 ஆம் திகதி சுதேவ ஹெட்டி ஆராய்ச்சி நீதிமன்றில் ஆஜராக வேண்டும் என்ற நிபந்தனையில் பொலிஸ் பிணையில் அவர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

## தினேஷ் ஷாப்டரின் கொலை தொடர்பில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், பொரளை மயானத்தில் வைத்து கொல்லப்பட்டுள்ளதாகவும் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

ஜனசக்தி குழுமத்தின் தலைவரும் பிரபல வர்த்தகருமான தினேஷ் ஷாப்டர் கடத்தப்பட்டு, கடுமையாக தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் பொரளை பொலிஸாரும், குற்றப் புலனாய்வு பிரிவினரும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். மேலும் சில விசேட பொலிஸ் குழுக்களும் அமைக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இவர் தமிழ் முற்போக்கு கூட்டணியின் முன்னாள் பொதுச்செயலாளர் சந்திரா ஷாப்டரின் மகன் என்பது குறிப்பிடத்தக்கது.






காலைக்கதிர் Kalaikkathir

# தமிழீழ விடுதலைப் புலிகளின் வேலைத்திட்டத்தை சுமந்திரனும் சாணக்கியனும் முன்னெடுக்கின்றனர்!

## தெற்கில் சுவிஸ் தூதரகம் முன் எதிர்ப்பு போராட்டம்



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றஉறுப்பினர்களானஎம்.ஏ.சுமந்திரன் மற்றும் இரா. சாணயக்கியனுக்கு எதிராக சுவிட்ஸர்லாந்து தூதரகத்துக்கு முன்பாக போராட்டமொன்று மேற்கொள்ளப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் ஆகியோர் அதிகாரப் பகிர்வின் ஊடாக அதிகாரப் பரவலாக்கல் எனும் தொனிப் பொருளில் தெற்கில் வேலைத்திட்டமொன்றை மேற்கொண்டிருந்தனர்.

சமஷ்டி தொடர்பாக தெற்கில் நிலவி வரும் பிழையான கண்ணோட்டத்தை இல்லாது செய்து, தமிழ் மக்களின் இனப்பிரச்சினை மற்றும் நல்லிணக் கம் தொடர்பாகத் தெளிவுப்படுத்தும் வகையிலேயே இந்த வேலைத்திட்டம் அமைந்திருந்தது.

இதன் ஓர் அங்கமாக அண்மையில் இந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுவிட்ஸர்லாந்து தூதுவரையும் சந்தித்து, கருத்தரங்கொன்றை ஏற்பாடு செய்திருந்தனர்.

இந்த நிலையில், இந்த செயற்பாடுகளுக்கு எதிர்ப்பை வெளியிடும்வகையிலேயே இந்தப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

சிங்கள இராவய மற்றும் அப்பே ஜனதா பக்ஷய எனும் கட்சியினராலேயே இந்தப் போராட்டம் நடத்தப்பட்டுள்ளது.

மேற்படி போராட்டக்காரர்கள், சுமந்திரன் மற்றும் சாணக்கியன் எடுக்கும் இந்த முயற்சிக்கு சுவிட்ஸர்லாந்து அரசாங்கம் ஒத்துழைக்கக்கூடாது என்றும் சமஷ்டி முறையிலான தீர்வுக்கு நாட்டில் இடமில்லை என்றும் தூதரகத்துக்குத் தெரிவித்துள்ளனர்.

மேலும், அதிகாரப் பரவலாக்கலை மேற்கொண்டுள்ள இந்தியாவே இன்னும் வளர்ச்சியடையாத நாடாகத்தான் காணப்படுவதாகவும்போராட்டக்காரர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அத்தோடு, வடக்கு – கிழக்கில் இராணுவக்குறைப்புக்காக சுமந்திரன்– சாணக்கியன் போன்றோர் மேற்கொள்ளும் முயற்சிகளுக்கும்இவர்கள்இதன்போதுஎதிர்ப்பை வெளியிட்டனர்.

இவ்வாறான செயற்பாடுகள் தமிழீழ விடுதலைப் புலிகளின் வேலைத்திட்டமென்றும் தெரிவித்துள்ளனர்.

## புலமைப்பரிசில் பரீட்சைக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி!

நாளை (ஞாயிற்றுக்கிழமை) நடைபெறவுள்ள தரம் – 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எல்.எம்.டி தர்மசேன இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

பகுதி இரண்டின் வினாப்பத்திரமே முதலில் வழங்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த காலங்களில் பகுதி ஒன்று வினாப்பத்திரமே முதலில் வழங்கப்பட்டது.

பகுதி ஒன்று வினாப்பத்திரம் என்பது நுண்ணறிவு வினாக்களைக் கொண்டதாகும். பகுதி ஒன்று வினாப்பத்திரம் கடினமானது என்பதால் பாட விடயதானங்கள் அடங்கிய பகுதி இரண்டின் வினாப்பத்திரத்தை முதலில் வழங்குமாறு பெற்றோர்களால் கோரப்பட்டிருந்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## கடலட்டை பண்ணைகளுக்கு எதிராக யாழில் போராட்டம்!



கிளிநொச்சி மாவட்ட கிராஞ்சி பகுதி மக்களின் கடலட்டை பண்ணைகளுக்கு எதிரான போராட்டத்துக்கு ஆதரவாக தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் நேற்று (வெள்ளிக்கிழமை) யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையம் முன்பாக போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையம் முன்பாக காலை 10 மணிக்கு ஆரம்பித்த போராட்டம், அங்கிருந்து வடமாகாண ஆளுநர் செயலகத்துக்கு பேரணியாக சென்று நிறைவடைந்தது.

## கல்முனை மாநகர சபையின் வரவு - செலவு திட்டம் 17 மேலதிக வாக்குகளால் வியாழன் நிறைவேறியது!



கல்முனை மாநகர சபையின் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் 17 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஆளுகையிலுள்ள கல்முனை மாநகரசபையின் வரவு– செலவுத் திட்டத்துக்கான விசேட சபை அமர்வு வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தலைமையில் இடம்பெற்றது.

இந்த அமர்வுக்கு மாநகர சபையின் மொத்த உறுப்பினர்கள் 41 பேரில் 35 உறுப்பினர்கள் சமுகமளித்திருந்தனர்.

பாதீட்டை சமர்ப்பித்து மாநகர முதல்வர் உரையாற்றியதைத் தொடர்ந்து உறுப்பினர்களின் கருத்துகளையடுத்து வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது 26 உறுப்பினர்கள் ஆதரவாகவும் 09 உறுப்பினர்கள் எதிராகவும் வாக்களித்தனர். 06 உறுப்பினர்கள் சபைக்கு சமுகமளித்திருக்கவில்லை.

ஆளும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியில் உள்ளிட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் 12 உறுப்பினர்களுடன் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் 05 உறுப்பினர்கள், சாய்ந்தமருது சுயேச்சைக் குழுவின் 04 உறுப்பினர்கள், தேசிய காங்கிரஸின் ஓர் உறுப்பினரும் ஹெலிகொப்டர் சுயேச்சைக் குழுவின் ஓர் உறுப்பினர் மற்றும் மான் சுயேச்சைக்குழு உறுப்பினர் ஒருவருமாக 26 உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்தனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் 03 உறுப்பினர்களும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் 03 உறுப்பினர்களும் சாய்ந்தமருது சுயேச்சைக் குழுவின் 03 உறுப்பினர்களும் எதிராக வாக்களித்தனர்.

அதேவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 04 உறுப்பினர்களும் சாய்ந்தமருது சுயேச்சைக் குழுவின் 02 உறுப்பினர்களும் சபைக்கு சமுகமளித்திருக்கவில்லை. இறுதியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 04 உறுப்பினர்களும் வரவு– செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து வருகை தந்திருந்தனர்.

வரவு– செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து உறுப்பினர்கள் பலரும் மாநகர முதல்வருக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்தனர். அத்துடன் பாதீட்டுக்கு ஆதரவாக வாக்களித்த உறுப்பினர்களுக்கு முதல்வர் தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

## 5 ஏக்கரில் இராணுவத்தினரின் விவசாய செய்கை அறுவடைகள் மட்டு. அரச அதிபரிடம் கையளிப்பு!



மட்டக்களப்பில் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட ஒருங்கிணைந்த சேதன விவசாய அறுவடைகள் இராணுவத்தின் 231ஆம் படைப் பிரிவின் பிரிகேடியர் திலுப பண்டாரவின் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் ஒருங்கிணைந்த பண்ணையின் பொறுப்பதிகாரி மேஜர் நிமால் பத்மசிறியால் மட்டக்களப்பு அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை கருணாகரனிடம் வியாழக்கிழமை மாலை அறுவடைகள் கையளிக்கப்பட்டன.

அரசாங்கத்தின் உணவுப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், ஆரையம்பதி பிரதேச செயலகப் பிரிவில் இராணுவத்தின் 11 எஸ்.ஆர்.சிங்க படைப் பிரிவால் விவசாயப் பயிர்ச்செய்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆரையம்பதி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கர்பலா கிராமத்தில், நான்கரை ஏக்கர் பற்றைக் காடுகளாக இருந்த அரச காணியை இராணுவத்தினர் பொறுப்பேற்று, ஒருங்கிணைந்த சேதன விவசாயப் பயிர்ச் செய்கையை மேற்கொண்டு வருகின்றனர்.

இங்கு கௌபி, பயறு, கச்சான் போன்ற தானியங்களுடன் மரவள்ளி, பயற்றை, புடோல், பாகல், சுரக்காய் போன்ற மரக்கறி வகைகள் பயிரிடப்பட்டு, மக்களுக்குக் குறைந்த விலையில் விற்பனை செய்யப்படுகின்றன.

இந்நிகழ்வில் ஆரையம்பதி பிரதேச செயலாளர் சத்தியாநந்தி, மட்டக்களப்பு மாவட்ட விவசாய பணிப்பாளர் ஆர்.ஹரிகரன், கால்நடை அபிவிருத்தித் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் உதயராணி குகேந்திரன், விவசாய விரிவாக்கல் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் ஜி. பேரின்பராசா, லெப்டினன் கேர்னல் தம்மிக ஆகியோர் கலந்துகொண்டனர்.

## 200 கிலோவுக்கும் அதிக நிறைகளை கொண்ட ஐஸ், ஹெரோயின் போதைப்பொருள்கள் மீட்பு!

200 கிலோகிராமுக்கும் அதிக நிறை கொண்ட ஐஸ் மற்றும் ஹெரோயின் போதைப்பொருள்களைக் கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர். தெற்கு கடற்பரப்பில் வைத்து, இரண்டு படகுகளிலிருந்து இந்தப் போதைப் பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன எனக் கடற்படையினர் தெரிவித்துள்ளனர். இந்த சம்பவம் தொடர்பில் சில சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் கடற்படையினர் குறிப்பிட்டுள்ளனர். கைப்பற்றப்பட்ட போதைப்பொருள்களையும், சந்தேகநபர்களையும் பொலிஸாரிடம் ஒப்படைக்க கடற்படையினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

## உள்ளூராட்சிமன்ற தேர்தலை நடத்துவது தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனுக்கள் விசாரணைக்கு!

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் தாக்கல் செய்த 2 ரிட் மனுக்களை ஜனவரி 18ஆம் திகதி விசாரணைக்கு எடுக்க உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை விரைவில் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு உத்தரவிடக் கோரி, ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு தாக்கல் செய்த மனுக்கள் நேற்று (வெள்ளிக்கிழமை) உச்ச நீதிமன்றத்தில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

கடந்த திங்கட்கிழமை, ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார மற்றும் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் ஆகியோரால் ஒரு மனுஷவும், சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர, லக்ஷ்மன் கிரியெல்ல, அநுர பிரியதர்ஷன யாப்பா மற்றும் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரால் மற்றைய மனுவும் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 17.12.2022இல் வெளியிடப்பெற்றது.